நூலகர் நூல் வல்லோர்
LIBRARIAN: A SCHOLAR

தமிழ்நாடு நூலக மாநாடு
TAMILNADU LIBRARY CONFERENCE
1993

நூலகர் நூல்வல்லோர்
LIBRARIAN : A SCHOLAR

Seminar Papers
Tamilnadu Library Conference
University of Madras
12-13, March 1993

Editor
M. MUTHUSWAMI

Associate Editors
R. Vengan
K. Kathireson

SELLING RIGHTS:
Murugalayam
8/2, BRINDAVAN STREET
MADRAS - 600 033

Madras University Library Staff Association
University of Madras
Madras - 600 005

1993

© Copy right: **Madras University, Library Staff Association,**
University Buildings, Madras - 600 005.

First Edition : March 1993

SELLING RIGHTS:
Murugalayam
8/2. BRINDAVAN STREET
MADRAS - 600 033

Price : Rs.50.00 US$ 5 £ 2

Computer typeset by **K.R.B.E Printers**, 10/1, First Main Road,
Kasturba Nagar, Adyar, Madras - 600 020.

UNIVERSITY OF MADRAS

CHEPAUK MADRAS - 600 005

Telex: 41-6376 Phone: Off: 561074 Res: 2350304

S. SATHIKH

VICE-CHANCELLOR

No. VC/M2/93/3720

March 3, 1993

FOREWORD

It is indeed a commendable initiative on the part of our Univerisity Library Staff to organise the First "**Tamil Nadu Library Conference 1993**" on 12th & 13th March 1993 at University of Madras with the theme of "**Librarian: A Scholar**".

The First Indian Union Education Minister Dr.Abul Kalam Azad observed that "Inequalities could not be permanently eradicated unless there is an equality of Educational achievement." To reach that target, it is the duty of the Libraries and Librarians to make people read the right type of books. A Professional Librarian with a status equal to that of the Academic Staff and with a salary in keeping with it, was allowed to initiate, freedom and responsibility and in this matter our Madras University was a pioneer in the Country and the First University Librarian Dr.S.R. Ranganathan assumed charge on 4.1.1924. He has done a lot of field experiments in the University Library and many important Library professional decisions have been taken at the meeting held in our old Historic Senate Hall and having endowed to our University Rupees One Lakh in 1957 for instituting a Chair in Library Science, he has done a yeoman service to the Library professionals as well as for the Nation and thus became the "Father of Library Science of India."

I am happy to foreword this book which contains useful articles from Eminent Professionals both in Tamil and English and congratulate the Organisers for this useful effort.

(S. SATHIKH)

UNIVERSITY OF MADRAS

UNIVERSITY BUILDINGS,
CHEPAUK,
TRIPLICANE P.O.
MADRAS - 600 005

Phone: Off: 561055, 568778
Resi.: 412481
Telex No.41 6376 UNOM IN

Dr.P. GOVINDARAJULU, M.Sc.,Ph.D,
F.R.E.S. (Lond).F.R.S.H. (Eng) F.I.R.S.T.(Eng),
F.I.C.S..F.T.A.Sc, F.A.S.I
Registrar

Dated March 3, 1993

MESSAGE

I am glad to know that **Tamilnadu Library Conference** will be held on **12.3.93 and 13.3.92.**

Further it gives me a great pleasure to learn that there will be a Seminar on the Topics: "Librarians Role in Rural and High School Libraries", "Human Resources Development in handling advanced information technology in College, University Libraries" and "Development of Library Movement in Tamilnadu".

I would like to state that the Seminar on the above Topics will be very useful to create awareness of the Library Movement and its importance to the Society as a backbone for the growth and advancement of various research activities.

REGISTRAR

To

Thiru M.Muthuswamy, *M.A., B.Lib.Sc.,*
Organising Secretary,
Tamil Nadu Library Conference 1993
O.R.I. Library
University of Madras
Marina Campus, Madras 600 005

PREFACE

"கற்றனைத்தூறும் அறிவும் ஆற்றலும்"

"Learning promotes (one's) natural (innate) talent" is the motto of our Madras University which is the mother of the Universities of Tamilnadu as well as South India including Ceylon. The instrument of education fell into three classes - the informal, formal and semi-formal. i.e. Home, School and Library. Library is an instrument of education and a well equipped library is the most valuable possession of any Nation.

Tamilnadu is the pioneer for the public library movement and our illustrious "Father of Library Science in India" Dr. S.R. Ranganathan, our First and Foremost University Librarian has lit the torch of professional learning. Inspired by his genius efforts for the professional achievement and upliftment, we the library professionals in our university have decided conduct the first ever "Tamilnadu Library Conference 1993" in our university with a seminar and its theme is "Librarian : A Scholar".

This book contains articles from Professional Eminents and Scholars and we are grateful to Thiru G. Ranganathan, Director of Public Libraries who has encouraged us to publish this volume. We are thankful to the contributors of articles, delegates, donars. We owe a lot to our University Registrar Dr. P. Govindarajulu for his assistance and guidance.

We are ever grateful to our respected Vice-Chancellor Dr. S. Sathik who has permitted us to organise the conference with a seminar to boost the professional calibre who is also a 'Fast reader' of books and guardian of library professionals.

12.3.1993
University of Madras

M. MUTHUSWAMY
Editor
Organising Secretary

"The First Madras University Librarian"



Dr. S.R. Ranganathan, ***M.A.L.T. FLA. D. Litt.***
(9.8.1892 – 27.9.1972)
Mrs. Sarada Ranganathan

CONTENTS

Foreword	*- Prof. S. Sathikh*	iii
Message	*- Dr. P. Govindarajulu*	iv
Preface	*- M. Muthuswami*	v
Felicitations		
Keynote Address	*- Dr. S.V. Chittibabu*	

1. டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் சில நினைவுகள்
 - இரா. முத்துக்குமாரசாமி 1

2. வளமான வாழ்விற்கு நூலகங்கள்
 - சி.பி. வசிஸ்த் 7

3. பல்கலைக் கழக நூலகர்களின் சமூக நிலை
 - திருமதி C.N. திலகவதி & திருமதி மனோரமாஸ்ரீநாத் 15

4. ஆவணக் காப்பகத்தில் நூலகர் பணி : ஓர் ஆய்வு
 - மு. இராஜேந்திரன் 21

5. சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்புத்துறையின் பணிப்பாங்கு - டாக்டர் வ. ஜெயதேவன் 27

6. தமிழ்ச் சுவடி நூலகம்
 - டாக்டர் இ. சுந்தரமூர்த்தி 32

7. நூலகரும் நூல் வல்லோராதல்
 - க. கணேசன் 47

8. புத்தக சாலை
 - பாரதிதாசன் 54

9. புத்தக சாலையின் பெருமை
 - முதுமொழி கு. கதிரேசன் 56

10. திருக்குறளில் 'நூல்' 60

11. Public Library System - A Requirement of the Feature
- G. Ranganathan 61

12. USIS Library Services in South India
- M.K. Jagadish 67

13. Science and Technology Libraries Librarian
- The Manager - R. Vengan 72

14. Mass Communication and the Role of Rural Libraries
- S. Palani & S. Ganesan 82

15. Information and Industrial Librarian
- R. Subramanian 86

16. Continuing Education for Libraries
- R. Ravichandran 100

18. Role of Rural Libraries in Tamil Nadu
- G. Dhanasekaran 104

19. Librarianship - Today and Tomorrow
- Mrs. Ally Sornam 108

20. Aspects of Mackenzie Manuscripts
- Dr. S. Soundarapandian 111

21. The Social & Humanities Librarians of India
Challenges and Responses in the 1990s.
- Dr. Vedagiri Shanmugasundaram 117

22. உங்கள் நூலகர் பா. கலியாணசுந்தரம்
- வே. சங்கரநாராயணன் 124

**PRIVATE SECRETARY
TO THE VICE-PRESIDENT OF INDIA
NEW DELHI**

February 16, 1993

MESSAGE

The Vice-President of India is glad to know that First Tamil Nadu Library Conference, 1993 is going to be held on 12th and 13th March, 1993 at University of Madras and there will be a Seminar in the Conference.

The Vice-President sends his best wishes for the success of the Conference and the Seminar.

(V. AYYASWAMY)

M. VEERAPPA MOILY
CHIEF MINISTER

BANGALORE 560 001

DATED 8/3/93

MESSAGE

I am immensly happy to learn that the Tamil Nadu Library Conference will be held in Madras on 12th and 13th of March, 1993.

That 24 papers are going to be presented on the occasion by eminent professionals and Scholars on the theme "Librarian a Scholar" is the indication of an encouraging trend in the library movement.

Inculcation of reading habit will go a long way in the acquisition of knowledge and help mould the character of people.

I wish the library conference all success.

(M. VEERAPPA MOILY)

K. VIJAYA BHASKARA REDDY
CHIEF MINISTER ANDHRA PRADESH

HYDERABAD

DATE 4-3-1993

MESSAGE

I am glad to know that the First Tamil Nadu Library Conference 1993 will be held from 12th March, 1993 at Madras and a seminar on the theme "Librarian : A Scholar", is being organised on that day.

Librarians play an important role in making easily accessible various reading materials to people and help propogate reading habits in the people.

I hope, the conference will address itself to the problems faced by Librarians and offer useful suggestions for further improvement of Library management.

I wish the conference and the seminar all success.

(K. VIJAYA BHASKARA REDDY)

K. KARUNAKARAN
CHIEF MINISTER, KERALA

THIRUVANANTHAPURAM

March 3, 1993

MESSAGE

I am glad to learn that the First Tamilnadu Library Conference 1993 is being held in the second week of March 1993. Considering the rapid developments that are taking place in the field of information technology. I feel that the deliberations of this Conference would be of tremendous value. I convey my hearty greetings and wish every success to the Conference.

(K. KARUNAKARAN)

**LOK SABHA SECRETARIAT
PARLIAMENT HOUSE,
NEW DELHI - 110 001**

2nd March, 1993

MESSAGE

I am glad to learn that the University of Madras is organising a Seminar on Librarian : A Scholar during the First Tamil Nadu Library Conference from 12 to 13 March, 1993 in Madras.

"Library is a growing organism" says one of the five principles of Library Science propounded by Dr. S.R. Ranganathan, the Father of Library Movement in India. True to this maxim, the conventional function of a library has been radically changed by the recent developments in information and communication technology. The librarian is no longer only a collector, a cataloguer, a keeper and a preserver of the storehouse of wisdom, he, with his learning, erudition and extensive reading, has to perform the role of an information scientist. He has to keep himself abreast of the latest developments not only in the field of library science but also in the entire gamut of human knowledge contained in the reservoir of his library. Knowledge is power and on acquiring it with a wider perspective, the librarian can give a scholarly touch to the services provided by him to his readers.

It is indeed a matter of great satisfaction that the Conference is being held in Madras, a place where Dr. Ranganathan dedicated his whole life to leave a rich legacy endowing library science with a content and meaning that could meet the challenges of all times to come.

I do hope that the Seminar will not only stimulate fresh thinking on the role, performance and ideals of a librarian but will also enlighten the new generation of young professionals and of course, the very many library users.

I wish the Conference all success.

(G.C. MALHOTRA)
Director
Parliament Library

FIRST TAMIL NADU LIBRARY CONFERENCE - 12-3-1993

Keynote Address

by

Prof. Dr. S.V. Chittibabu,* M.A. B.T. D.Litt

BACKGROUND

I am profoundly thankful to the organisers of this first Tamil Nadu Library Conference for giving me an opportunity to give the Keynote Address to the delegates who have come from the different parts of our State to participate in this meet and share their thoughts and views in the Seminar to be held here tomorrow. As Vice-Chairman of the newly established Tamil Nadu State Council for Higher Education I deem it a pleasure and privilege to associate myself with this Conference, which I understand is being held for the first time bringing together as many Scholar - Librarians of the State as possible and enabling them to discuss their role and responsibilities and the new strategies that they would do well to adopt to fine-tune their performance in the context of the increasing importance of the valuable contributions made by the Library Movement both on the State and National levels. I heartily congratulate the Chairman and members of the Organising Committee for making this distinguished assemblage of specialists possible, for by so doing they have mobilised the hidden scholarly wealth of library resources of our State. I understand that the first All India Conference of Librarians met in Lahore way back in 1918. And the first step it suggested as a measure of reciprocity was compilation of a census of libraries in India with the aid and support of the Government of India. It is interesting to note that it was in 1920 that, thanks to the initiative taken by the Hob'ble Mr. K. Venkatappayya, provision was made in the budget of the then Madras Presidency for Rs.20,000 for the purpose of encouraging public libraries. This may be regarded as the humble beginning of a Library Movement in Madras. This Madras University of ours came to have a library building of its own in 1926, thanks to the efforts of the then Vice-Chancellor and a few distinguished public men of the City of Madras

---

* Vice Chairman, Tamilnadu State Council for Higher Education, Madras.

besides the illustrious celebrity Mr. S.R. Ranganathan himself, who was then the Chief Librarian. The concept of "Rural Library Service" was the brainchild of Mr. S.R. Ranganathan, who it was, that expounded its potentiality for the uplift of the masses by offering what he called "a subtle but pleasant mixture of amusement and instruction".

For furthering the cause of the library movement the Madras Library Association was set up in 1928. While appealing for support to this Association, Mr. A. Ramaswami Mudaliar had this significant observation to make :

"Libraries by imparting adult education in its wider sense enabled the average graduate of an Indian University to cultivate a sense of culture and taste for knowledge".

Mrs. Mc dougall, Principal of Women's Christian College, speaking of the "Library Movement and Women's Education" in 1930 pleaded that in the matter of benefiting by the library movement there was no reason for discrimination between men and women. Quoting Cicero, she said, "studies nourished our youth, delight our old age and add a glory to our happiness and offer a refuge and consolation in our sorrows".

ROLE OF LIBRARIES IN EDUCATION

With his characteristic verve and enthusiasm, insight and vision, Mr. S.R. Ranganathan, it was, who, after giving an excellent exposition on the role of informal and semiformal instrument of education ever since the days of Plato deplored the inertia that thwarted the attempts of Madras to fall in line with the other countries of the world. His description of inertia that plagued the people runs thus :

"This demon is a clever Kamarupi. This veritable Proteus takes different shapes on different occasions. It appears as a snob, scoffing at library-publicity as vulgar; it appears as a cynic trying to trace all public service to some ulterior personal motive; it appears as a misanthrope cursing that we deserve nothing that is good; it appears now as jealousy and now as benumbing philosophy".

Years rolled by and it was only in 1948 when Mr. T.S. Avinashilingam Chettiar was Minister for Education, the Madras Public Libraries Act was passed which inaugurated, so to speak, a new era in which Local Library Authorities would function in coordinated manner, with the State Government contributing to the Library Fund a sum equal to the amount realised by the collection of library cess.

The Library Act having been put on the Statute Book, money was

collected by way of cess. In the initial stages the Local Library Authorities had to face some teething problems such as lack of suitable buildings and suitable books. Things started improving with the passage of time. The Libraries Act administration was first made part of the routine work of the Director of Public instruction. But later in the seventies a separate Directorate of Public Libraries came to be set up and this, I should say, was a turning point in as much it helped, nay, even accelarated the growth of the Library Movement in our State. In 1956 itself Local Library Authorities were given the green signal to go ahead with the project called 'Library on Wheels' as part of their programme of expansion of library service. A scheme for a 'Lending Service' was operationalised under which "house delivery of books" was arranged in 1959. It was but fitting that Madras which is rightly regarded as a pioneer is spreading the reading habit through a well-organised library movement should locate its Central Library in an imposing building of its own on Mount Road, with an interesting collection of as many as 50000 books, with ample facilities for readers in search of information or intellectual diversion.

RAPID STRIDES OF DEVELOPMENT IN TAMIL NADU

In the last two decades there has been notable progress of the library movement in the State, motivated as it has been by Dr. Anna's dictum viz. "For the development of the nation each and every house should have a library". It is heartening to note that the present Department of Public Libraries administers an efficient Public Library service extending throughout the State with special reference to rural areas. An outlay of Rs.1134 lakhs has been allotted for this Department in the Budget Estimate for 1992-93. The Connemara Public Library, Madras serves as the State Central Library and it also serves as one of the four National Depositories, receiving free of cost one copy of Books, Periodicals and Newspapers in all the Indian languages including Engish published in India. Further it is equipped with an impressive spectrum of technological aids like T.V. cum V.C.R., Computers, Reprographic machines, etc. As on 1.3.1992 the Connemara Library has 4.55 lakh books and is used by 6.85 lakhs of readers. It receives 3611 Periodicals and 240 Newspapers free of cost. There are at present 21 Local Library Authorities, 18 District Central Libraries and 1540 Branch Libraries including 9 mobile units and 920 part-time libraries. Rs.263 lakhs is collected as Library Cess. Government have provided Rs.11 lakhs as special grant for the weaker Local Library Authorities. Photo-copiers for the convenience of the readers to take copies of the relevant materials have been provided in certain District Central

Libraries. 1649 free sites for libraries have been obtained. Thanks to the vigorous enrolment drives undertaken by the authorities the total membership has increased to 20.27 lakhs. For meeting basic requirements of the libraries donations to the tune of Rs.150 lakhs have been collected from the public. Part- time libraries have been opened in villages which have each a population of about 5000. Even donations in terms of dailies, periodicals and books have also been secured for strengthening the usefulness of public libraries. 4050 patrons have contributed each a donation of Rs.1000 towards interest-yielding investments for the benefit of libraries in need of more books and periodicals. Under what is called the "Minimum Building Programme" more libraries have come to own their buildings with government grants each of Rs.2 lakhs for a building. Library Improvement Conferences have been organised periodically in the districts. 8 Libraries have been adopted by Banks or Industrial houses. Above all an Insitute of Library Science has been set up in the Directorate of Public Libraries in Madras for imparting training for untrained Grade III Librarians and also for conducting Refresher/Orientation Courses for Grades I, II & III Librarians every year.

AN ACTION PLAN FOR LIBRARY MODERNISATION

The concept of modern librarianship in India got a sound footing and earned professional recognition only after independence. Still if our libraries are really to make the grade, certain universally acceptable norms need to be adopted.

1. Our libraries should in the first instance become user-friendly. As Mr. Paul Nauta, General Secretary, International Federation of Library Associations (IFLA) says, "it is high time the Indian librarian thought less of himself and more of the visitor, the reader. The earlier the better for a nation engaged in pushing through its literacy campaign.
2. In technical terms Indian libraries should tell the readers about all the literature available on the subject of his interest, from where it would be obtained, and get it for him, if he asks for it. This apart, the library should be in a position to provide the reader photocopies of the material.
3. The library should act as the cultural, educational and social centre of the society it serves. This means owning or having access to the full gamut of the audio- visual medium besides the good old book. To do this, a modern library must have computerised bibliography and computer terminals linked to the national and

even international network for easy exchange of information. It may charge for the service rendered, if found necessary.

4. Librarians should tackle such nitty-gritty things as timings for libraries, their off-day and mobile libraries. Even serious things as reader surveys should be done. The librarian should be a promoter of the reading habit among children and adults in the catchment areas. In fact he should give a thrust to the literacy campaign using the library resources.
5. In the case of a library with limited resources, say, in a small town or district it should buy less of books and spend more on going high-tech, for a terminal linked to the national computer library network. A FAX machine and such other devices open up a window to the whole world of information. Of course all this would require certain infrastructure.
6. While the library staff should become reader- oriented and reader-friendly they should not be left far behind lest the competence of service should suffer. It should be borne in mind that a library staff whose interests are ensured do certainly render a high quality of service to the readers.
7. In India the GNP being Rs.350000 crores and the average per capita income being Rs.5000 the maximum expenditure of the libraries is below 4% of the total revenues of the country as a whole. Unless a minimum 6.25 percent of the total revenue of the State is spent by way of library grant, the library service would be only substandard. It has become obviously that while the stupendous mass illiteracy of the people is sought to be eradicated adequate budgetary grants will have to be raised to the standard level.
8. The publishers should offer special concessional rates of prices for libraries, 25% less than the published prices, if necessary, by sacrificing part of their profits.

UNIVERSITY LIBRARIES AND LIBRARIANS

A university is rightly described as a community where scholars and teachers are the head, students are the body and library its heart. For the efficient functioning of the university, community, the heart must be strong. Thomas Carlyle was not exaggerating when he described a "true university as a library of books". Sir Charles Robertson, an English Vice-Chancellor once observed, "if he were a dictator, he would reduce the time devoted to lectures to a third of that usually

occupied by then and insist on the students spending three hours every day in the library".

Training in higher branches of learning and research is mainly a question of learning how to use the tools and if the library tools are not there how can the student learn to use them? Any tampering with the library budget in the form of economics or cuts will be tampering with the life and purpose of the university or college.

The staff of the library who are it arms have to be possessed of rather special qualities. The senior library staff should possess a general knowledge of all the main branches of study in the university. They must have a wide acquaintance of the broad groupings of books and documents relating to each branch of knowledge. They should also be trained in the basics of computer programming so that the books and documents which are computerised can be traced and identified speedily for the user. The library staff in general should cultivate those human qualities which will make the library a pleasant storehouse of knowledge which the student user may regard as his home away from home. The University Grants Commission has rightly laid increasing emphasis on library work by each individual scholar. With decreasing accent on lectures and teaching, as in Oxford and Cambridge the student should be made to spend more time in the library. This way the uneducational practice of the student depending on notes dictated by the teacher or on bazaar scribs can be put an end to.

India has now a large infrastructure of higher education consisting of 189 universities and 7121 colleges with an enrolment of 44,25,000 students and having 2,62,000 teachers whereas there were 18 universities only before 1947. Each university has a library attached but its size varies in terms of staff, budget, collection, services, etc. In recent years there has been severe financial crisis in universities. Hence gaps are developing in the collections. Funds are diverted to periodicals at the cost of book collection. This is an unhealthy sign for scholarship and teaching programmes.

It is understood that 67% of the University Libraries are being headed by the university librarians; 13% by deputy librarians and 8% by the assistant librarians. 52% of the top positions in the university libraries are vacant. This is a sad reflection on the attitude of authorities. Filling up of the above positions should be given high priority by the authorities.

The reasonable norm for a university library should be 6.5% to 10% of the University budget, as suggested by the Kothari Commission.

Most university libraries fall below this norm. This position must be improved as expeditiously as possible.

Not all universities have atleast 25000 volumes. 31% of them have even less than this number. Only 3% libraries have collections exceeding 5 lakhs. Not a single one has hit one million.

More than 95% of the libraries provide reference service. Reprographic service is available in 80% of them. Only 15% of them have microfilming facility. Only 2% of them have some of their operations computerised.

INFLIBNET (Information and Library Network) is a major project of the University Grants Commission to be implemented during the Eighth Five Year Plan Period. This is a most welcome service benefiting the university institutions and R&D complexes. Its major aim is to modernize the operations of libraries and information centres in the country using computer and information technologies.

Conclusion

There is no gainsaying that university libraries play a crucial role in the educational process. They have to cope with the burgeoning number of users and with users from a wide variety of areas. There is unfortunately a severe constraint on our resources. So we need *sustainable librarianship.* That is to say, the ability to sustain with reduced resources, by adopting innovative practices, leading to economies of different kinds. Innovative ideas must be given encouragement. Opportunities should be provided to both professionals and other staff members to enable them to put forward new ideas. I hope that your Seminar will do some critical thinking and come up with such suggestions as would give the needed boost and thrust to the optimal functioning of our university libraries. I assure you that the Tamil Nadu State Council for Higher Education would be glad to extend its support and guidance to the university libraries which have a pivotal role to play for maintenance of standards of higher education.

References:

1. The Hindu Speaks - On Libraries, 1992.
2. University News: Special Issue on University Libraries - 1992.
3. Policy Note on Education, Government of Tamil Nadu, 1992.
4. University Libraries and Libraries in India: P.B. Mangla, 1992.
5. Higher Education and Role of Libraries in India: Arun Kumar, 1992.

டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் சில நினைவுகள்

இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பிலிப்.

இந்திய நூலகத்தந்தை எனப் போற்றப்பெறும் டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள் உலகிற்குத் தமிழகம் தந்த கொடையாகும். உலக நூலக இயல் பரப்பில் இன்று இந்தியாவிற்கு மதிப்புக்குரிய இடம் இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் இவரே. இவர் மட்டும் தோன்றியிராவிடில் இந்திய நூலகங்கள் மற்ற நாட்டு நூலகங்களைப் போலவே மேலை நாட்டு டூவி டெசிமல் முறையையே கையாண்டிருக்கும். இன்றும் இந்தியாவில் பல நூலகங்கள் இதைக் கையாண்டாலும் டாக்டர் எஸ்.ஆர். ஆர். கண்டுபிடித்த கோலன் பகுப்புமுறைக்குத் தனி இடம் உள்ளதை யாராலும் மறக்க முடியாது.

தஞ்சை மாவட்டத்தில் சைவத்திற்குப் பெருமை தேடித்தந்த நால்வர் பெருமக்களுள் முதல்வரான திருஞானசம்பந்தப் பெருமான் தோன்றி உமையம்மையின் திருமுலைப்பாலுண்டு 'தோடுடைய செவியன்' என்ற திருப்பதிகத்தைப் பாடிய சீர்காழித்திருத்தலத்தில் தோன்றியவர் டாக்டர் எஸ்.ஆர்.ஆர்.

ஒரு கணிதப்பேராசிரியராக வரவேண்டுமென்று அத்துறையில் சிறப்பான முயற்சி எடுத்து சென்னை மாநிலக் கல்லூரியில் கணிதவியல் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தின் நூலகராகப் பொறுப்பேற்றபோது அவர் துறையே மாறியது. கணிதமேதை ராமானுஜத்தைப் பின்பற்றி ஒரு கணிதமேதையாக உருவாக வேண்டியவர் நூலக இயல் மேதையாக உருவானது நூலகத்துறை செய்த பெரும்பேறேயாகும்!

சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூலகராக லண்டன் மாநகருக்குச் சென்ற எஸ்.ஆர்.ஆர். நூலகப் பயிற்சி பெற்ற போது பொது நூலகப் பணியை உன்னிப்பாகக் கவனித்து வந்தார்.

---

* மேலாண்மை இயக்குநர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 018.

பல்கலைக் கழக நூலகப் பணியை வாழ்க்கை நடத்தப் பொருள் தரும் பணியாக ஏற்றுக் கொண்டாலும் பொதுமக்கள் நூலகப் பணியைத் தம் வாழ்நாட் பணியாக எடுத்துக் கொண்டார்.

பயிற்சி முடிந்து தமிழகம் திரும்பியதும் சென்னைப் பல்கலைக்கழக நூலகராகப் பணியாற்றிக் கொண்டே தமிழகத்தில் நூலக உணர்வு பெருகவும் பொதுமக்கள் நூலகம் உருவாகவும் பாடுபடலானார். அதன்பொருட்டே சென்னை நூலகச் சங்கத்தை (Madras Library Association) உருவாக்கினார்.

தமிழ் நாட்டில் பொதுநூலக இயக்கம் முறையாக மலரவேண்டுமானால் பொதுநூலகச் சட்டம் அரசுவழி நிறைவேற்றப்பட வேண்டும் என்று முயன்றார். இதற்கிடையில் நாடு விடுதலை பெற்றது. தனியாகப் பிரிந்த சென்னை மாகாணத்தின் சட்டசபையில் 'சென்னை பொதுநூலகச் சட்டம்' நிறைவேற முழுமுதற் காரணமாக இருந்தவர் அவரே.

அவர் கடும் உழைப்பால் சென்னைப் பல்கலைக்கழக நூலகம் எழும்பூர் மியூசியம் பகுதியிலிருந்து சென்னைக் கடற்கரைக்கு மாறியது. புது நூலகக் கட்டிடம் உருவாக அவர் கடுமையாக உழைத்தார். இன்றுள்ள நூலகக் கட்டிடம் அவர் நேரடிப்பார்வையில் உருவானதாகும். அது உருப்பெற்ற காலத்தில் எஸ்.ஆர்.ஆர். திருவல்லிக்கேணியில் குடியிருந்தார். காலையில் எழுந்தவுடன் பொடிநடையாகக் கட்டிடம் எழுப்பும் பணியை மேற்பார்வையிடச் செல்வார். தலைமைக் கொத்தனாரைக் காலையிலே வரச் சொல்லி அன்று என்னென்ன செய்ய வேண்டுமென்பதை முழுவதும் விளக்குவார். முன் நாள் நடந்த வேலையை மேற்பார்வையிட்டு ஒப்புதல் அளிப்பார். மேலை நாடுகளில் நூலகங்கள் எப்படி இருந்தனவோ அந்த அமைப்பிலேயே கட்டிடத்தை உருவாக்கினார்.

கட்டிடத்தின் ஒவ்வோர் அமைப்பிலும் தனிக்கவனம் செலுத்தினார். வாயில் சன்னல், கதவு, சன்னல் கம்பி, தளம், வெளிச்சத்திற்கு வட்ட வட்ட சன்னல்கள், மேலை நாடுகளிலிருந்து வண்ணவண்ணக் கண்ணாடிகள் எல்லாமே அவரே தேர்ந்தெடுத்து அமைத்தார். புத்தகம் அடுக்க நான்குமாடிக்கும் கீழிருந்து மேல்வரை ஒரே உயர்ந்த அமைப்பு, மேசைகள், வசதியாக உட்கார நாற்காலிகள், புத்தகம் வெளியே கொடுக்க, வசதியாக வழங்க மேசைகள் எல்லாமே அவர் சொன்னபடியே அமைக்கப்பெற்றன.

நூலகக் கட்டிடப் பணி நடந்து, அதில் நூலகம் குடியேறியது. எஸ்.ஆர்.ஆர். நூலக இயல் பற்றி வகைவகையான நூல்கள் எழுத முற்பட்டார். புத்தகங்களைப் பகுக்க இந்திய அறிவை அடிப்படையாகக் கொண்டு கோலன் பகுப்புமுறை வகைப் படுத்தப்பட்ட பட்டியல் முறை (Classified Catalogue Code) நூலக ஆட்சியியல் என முப்பதுக்கும் மேற்பட்ட துறைகளில் புதிய நூல்கள் படைத்தார்.

நூலக இயல் வளர்ச்சிக்கு ஐந்து அடிப்படை விதிகளை வகுத்தார் "Five Laws of Library Science" என எல்லோராலும் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. அத்துடன் நூலக வளர்ச்சியில் அவருக்கிருந்த தொலைநோக்குத் திட்டமும் உலகுக்குத் தெரிய வந்தது.

1. புத்தகங்கள் பயன்பெறுதற்கே
2. ஒவ்வொரு நூலுக்கும் வாசகர்
3. ஒவ்வொரு வாசகருக்கும் நூல்கள்
4. வாசகர் காலத்தை ஓம்புக.
5. நூலகம் வளரும் அமைப்பு

இந்த ஐந்து விதிகளும் நூலகருக்கென இயற்றப் பெற்றதாயினும் நூலக உணர்வைப் பொது மக்களிடையே பரப்புவதற்கும் இவை பயன்பட்டன.

நூலகத்திற்கு வரும் புத்தகங்களைப் பொதுமக்கள் பயன்படுத்த என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றை நூலகர்கள் பொறுப்பாகச் செய்ய வேண்டும். நூல்கள் கிழிந்து விடுமென்றோ அல்லது காணாமற்போய் விடுமென்றோ பூட்டி வைக்கக் கூடாது. அவை பயன் பெறுவதற்காகவே உள்ளன.

நூலகத்தில் பல வகையான தலைப்புகளில் பல்வேறு பொருள்களில் நூல்கள் இருக்கும். நூலகத்திலுள்ள நூல்களுக்கு ஏற்ற வாசகர்களைத் தேடிப்பிடிக்க வேண்டியது நூலகர் கடமை. இந்த நூல்களைப் படிக்க ஆளே இல்லையென்று நூல்களை மூலையில் கட்டிவைத்து விடக்கூடாது. நூலகத்தில் உள்ள நூல்களை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர என்னென்ன செய்ய முடியுமோ அதை நூலகர்கள் செய்ய வேண்டும்.

நூலகத்திற்கு வரும் வாசகர்கள் பலவகையான நூல்களைத் தேடிவருவர். அந்நூல்கள் நூலகத்தில் இருந்தாலும் வேறு

எங்கிருந்தாலும் தேடிப்பிடித்து அவருக்குப் படிக்கக் கொடுத்தால் அதுவே நூலகர் செய்யும் பேருதவியாகும்.

நூலகத்திற்கு வரும் வாசகர்களின் நேரத்தைப் பொன்போல் கருதி கூடியவிரைவில் அவருக்குத் தேவையான செய்திகளை சேகரித்துக் கொடுக்க வேண்டியது நூலகரின் பொறுப்பாகும்.

நூலகம் என்பது நூல்கள் எண்ணிக்கையிலும் சரி, இடத்தின் பரப்பளவிலும் சரி - வரும் வாகர்களின் எண்ணிக்கையிலும் சரி எல்லாவற்றிலும் பெருகிக்கொண்டேயிருக்கும். இதைக் கருத்தில் கொண்டே நூலகத்தின் வளர்ச்சியில் திட்டமிட வேண்டும்.

உலக முழுவதுக்குமுள்ள நூலக இயக்கத்துக்கு இந்த ஐந்து விதிகளும் பொருந்தும். இவற்றைப்பற்றி விரிவாக ஒரு நூல் எஸ்.ஆர்.ஆர். எழுதியுள்ளார்.

எஸ்.ஆர்.ஆர். முற்சியால் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் நிறைவேற்றப் பெற்றது. இந்தியாவில் முதன்முதலாகப் பொது நூலகச் சட்டம் நிறைவேற்றியது தமிழ்நாடுதான். இதற்கு முழுக்காரணம், எஸ்.ஆர்.ஆரே! இதன் பயனாய் இன்று தமிழ்நாட்டில் பொது நூலக இயக்கம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் சிறப்பாக இயங்கி வருகிறது. ஒரு முழுநேரப் பொது நூலகத்துறை இயக்குநரின் பொறுப்பில் மாநிலப் பொதுநூலகமாக சென்னை கன்னிமாரா நூலகமும், 15 மாவட்ட மைய நூலகங்களும் 1600க்கும் மேற்பட்ட கிளை நூலகங்களும் நல்லமுறையில் இயங்கிவருகின்றன.

சென்னைப் பல்கலைக் கழக நூலகத்திலிருந்து ஓய்வு பெற்ற டாக்டர் எஸ்.ஆர்.ஆர். வாரணாசிப் பல்கலைக் கழகத்தில் சிறிது காலம் பணியாற்றிய பின் டெல்லிப் பல்கலைக் கழக நூலகவியல் பேராசிரியர் பொறுப்பை ஏற்றார். அவர் சென்னையிலிருக்கும்போதே நூலகர்களை உருவாக்கப் பட்டப் படிப்பை ஏற்படுத்தித் தக்க நூலகர்களை உருவாக்கினார். டெல்லிவரை சென்று ஆசிரியப் பணி ஆற்றியதன் பயனாக ஆயிரக்கணக்கான நூலகர்கள் உருவாகி இன்று இந்தியா முழுவதும் பரவியுள்ளார்கள்.

சென்னையிலிருக்கும்போதே அவருடைய புகழ் உலகமுழுவதும் பரவியது. நூலக மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொள்ள வெளிநாடுகளுக்குப் பலமுறை சென்றார்.

அவருடைய நூலகப் பணியைப் பாராட்டி தில்லிப் பல்கலைக்கழகம் டி.லிட் பட்டம் வழங்கியது. இந்திய அரசு 'பத்ம ஸ்ரீ' விருதை வழங்கியது. எல்லாவற்றுக்கும் மேலாக நூலகவியல் தேசியப் பேராசிரியராக (National Professor in Library Science) டாக்டர் எஸ்.ஆர்.ஆர். நியமிக்கப் பெற்றார். இத்திட்டத்தின்கீழ் அவர் இருந்த இடத்தில் இருந்து ஆய்வு செய்யவும் இரண்டு டாக்டர் பட்ட ஆய்வாளர்களை நெறிப்படுத்தவும் வகை செய்யப்பட்டது. மறையும்வரை இப்பொறுப்பில் அவர் இருந்தார்.

தில்லிப் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற பின், தம் வாழ்நாளின் இறுதிப் பகுதியைப் பெங்களூரில் செலவிட முடிவு செய்தார். தம் துணைவியார் சாரதா அம்மையாருடன் அங்கு குடியேறினார். அவர் தம் ஒரே மகன் திரு. யோகீஸ்வரன் ஜெர்மனியில் குடியேறிவிட்டார்.

இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழு நூலகஇயல் பகுதித் தலைவராக இருந்து தில்லிக்கு அடிக்கடி செல்வார். இந்திய நூலகஇயல் மாநாடுகளில் அடிக்கடி கலந்து கொள்வார். வெளிநாடுகட்கும் செல்வார். சென்னைக்கும் அடிக்கடி வருவார். சொற்பொழிவுகள் நிகழ்த்துவார். 1960 முதல் 70 வரை சென்னை நூலகச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சென்னை நூலகர்களை ஊக்கப்படுத்தினார். தமிழக அரசு நூலகக் குழுவில் உறுப்பினராக இருந்தார். சென்னையில் மீண்டும் நூலக உணர்வு தலைகாக்க உதவினார்.

1970க்குப் பின் உடல்நிலை தளர்வு ஏற்பட்டது. நுலகஇயல் மேல்கல்விக்கு உதவும் 'டாக்குமென்டேசன் ரிசர்ச் டிரெயினிங் சென்டர்' அவரால் பெங்களூரில் தோற்றுவிக்கப்பெற்றது. ஆண்டுதோறும் பல மாணவர்களை உருவாக்கினார். அகவை முதிர்ந்த நிலையிலும் படுக்கையில் படுத்துக் கொண்டே மாணவர்களுக்குப் பாடம் நடத்தினார். நூலக இதழ்களில் ஆயிரக்கணக்கான கட்டுரைகளை 1920 முதல் இறுதிவரை எழுதினார். இறுதியில் அவரே நூலக இயல் இதழ் ஒன்றை நடத்தினார். ஏறத்தாழ அறுபதாண்டுகளுக்கு மேல் நூலகஇயல் சிந்தனையாகவே வாழ்ந்தவர் அவர்.

வாழ்க்கையில் மிக எளிமையாக வாழ்ந்தவர் டாக்டர் எஸ்.ஆர்.ஆர். மெல்லிய பட்டுவகையாலான ஜிப்பாவும் வேட்டியும் குளிர் நாடுகளுக்குப் போனால் தடித்த கோட்டும் - இவையே அவர் ஆடை! வெளிநாடுகளுக்குச் சென்றாலும், வெளியூர்களுக்குச் சென்றாலும் ஒரு பட்டுத் துணியில் மாற்று உடை ஒரு செட்

வைத்து முடிச்சுப் போட்டு கைத்தடியுடன் வைத்திருப்பார். வெளிநாடுகளில் எத்தனை நாட்கள் தங்கினாலும் பெட்டி எடுத்துக் கொண்டு செல்லமாட்டார். கேட்டால் மாற்றுடை ஒரு செட் போதுமே, எங்கு சென்றாலும் துணியைச் சலவை செய்து ஒரு மணி நேரத்தில் கொடுத்துவிடுவார்கள். பிறகு ஏன் நிறைய உடை? என்று கேட்பார்.

உணவிலும் சுருக்கமே. காலையில் ஒரு கோப்பை பால். பகல் 11 மணிக்கு ஒரு கோப்பை தயிர் சோறு. மாலையிலும் இரவிலும் பால். இது அவர் கடைசியாக 25 ஆண்டுகள் உண்ட உணவுப் பழக்கம். இடையில் வேறு எதுவும் உண்ண மாட்டார்.

உறங்கும் நேரம் தவிர மற்ற எல்லா நேரமும் வேலை பார்ப்பார். நண்பர்களுக்குத் தாமே கைப்படக் கடிதம் எழுதுவார். அஞ்சலட்டையில் முப்பது வரிகளுக்கு மேல் பொடியாக எழுதுவார். வருகிற கடிதங்களுக்கு அன்றே பதில் எழுதிவிடுவார்.

சென்னை, காசி, டெல்லி ஆகிய இடங்களில் பணியாற்றிய காலங்களில் மாலை நேரங்களில் வால்மீகி இராமாயணம் படித்து நண்பர்களுக்கு விளக்கிச் சொற்பொழிவாற்றுவார். இதுவே அவருக்குப் பிடித்த பொழுதுபோக்கும் மாற்று வேலையும் ஆகும்.

அவர் தாமும் உழைப்பார். பிறரையும் உழைக்கச் செய்வார். கடு மையாக உழைப்பவர்களை ஊக்கப்படுத்திப் புதிய பதவிகளில அமர்த்துவார். நாடு முழுவதும் நூலகச் சங்கங்கள் உருவாகக் காரணமாயிருந்தார். ஒவ்வொரு மாநிலத்திலும் நூலகச் சட்டம் நிறைவேற உதவினார். இந்திய நூலகச் சட்டம் ஒன்று நாடு முழுவதுக்கும் பொதுவாக உருவாக்க முயன்றார். அவர் முயற்சி நிறைவேறாது போயிற்று.

இந்தியாவில் நூலக இயக்கம் இன்னும் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்று விட்டதாகக் கூற முடியாது. இன்னும் நூலக இயக்கத்தின் மிக இன்றியமையாத் தேவையை அரசுப் பொறுப்பில் இருப்பவர்கள் உணரவில்லை. நூலகர்களின் தேவையை நாடும் மக்களும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. நூலக இயக்கத்தின் வெற்றிக்கு அரசும் மக்களும் ஒருங்கிணைந்து பாடுபடுதலே நூலக இயக்கத் தந்தை டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்களுக்குச் செலுத்தும் காணிக்கையாகும்.

வளமான வாழ்விற்கு நூலகங்கள்

சி.பி. வசிஸ்த்*

நூலகங்களின் வளர்ச்சியில் 1992-ஆம் ஆண்டு என்பது போற்றத் தகுந்தவற்றில் ஒன்றாகும். கடவுளின் அருள் பெற்ற பக்தனைப் போல், நூலக உலகம் மத்திய, மாநில அரசுகளின் பார்வையில் வளர்ச்சியடைவதற்கான வழிமுறைகளை நோக்கி மெல்ல நகருகின்றது. அதில் குறிப்பிடத்தக்க ஒன்று நாட்டில் 10 லட்சம் நூலகங்கள் அமைப்பதற்கான திட்டத்தை வகுத்து உடனடியாகப் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெறுவதாகும். நூலகங்கள் பெருகினால் மட்டும் போதாது அதன் பலன் எல்லோரையும் சென்றடைகின்றதா என்பதும் முக்கியம். நகர்ப்புறங்களில் நூலகங்களின் தரமும் அதன் பயனும் மக்களைச் சென்றடைந்தாலும் கிராமங்களில் அதன் தாக்கம் இன்னும் உணரப்படவில்லை. அதைப் போலவே சிறுவர்களுக்கு அதனை உபயோகிக்கும் வழி முறைகளும் அதனால் ஏற்படும் பயன்களும் இன்னும் முழுதாக உணர்த்தப்படவில்லை. இந்த இரண்டு பிரிவும் நூலகங்களின் வளர்ச்சியில் முக்கியமாக கவனிக்கப்பட்டாக வேண்டும்.

ஊரக நூலக மற்றும் சமூகவள மையம் (RLCRC)

இம்மையத்தின் தேவையைப் பல்வேறு வகையான அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் உணர ஆரம்பித்திருக்கின்றன. இந்தத் தகவல், வளர்ச்சி வேகத்தை துரிதப்படுத்தவும் காட்டப்படுகின்ற கவனத்தை அதிகரிக்கவும் உதவுகின்றன. ஆகையால் நூலக மற்றும் தகவல் பணியில் உள்ள அதிகாரிகள் தங்களின் பங்கையும் முயற்சிகளையும் மறு மதிப்பீடு செய்வது அத்தியாவசியமாகின்றது. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் தகவல் சேகரிப்பவர்களின் வேகத்துக்கு ஈடு கொடுக்க நூலக பணியாளர்கள் தங்களை, பயிற்சிக்குத் தயார்படுத்திக் கொள்வதும் இதுவரை தாங்கள் ஊரக தகவல் மையத்தின் மீது வைத்திருந்த எண்ணங்களை மாற்று

---

* தலைவர், இந்திய நூலகச் சங்கம், புது தில்லி.

கோணத்தில் சிந்திப்பதும் அவசியமாகின்றது. நூலக மற்றும் தகவல் அதிகாரிகளை உற்சாகப்படுத்த காமென்வெல்த் நூலகக் கூட்டமைப்பு மையம் தொடர்பாகப் பல கருத்தரங்கங்களை நடத்தி வருகின்றது. அத்தகைய கருத்தரங்கு ஒன்று புது தில்லியில் கடந்த ஆகஸ்ட் கடைசி வாரத்தில் இந்திய நூலகக் கூட்டமைப்பு (ILA) சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்தகைய கருத்தரங்கின் வாயிலாக 'ஊரக சமுதாய வள மையம்', என்ற தலைப்பில் வளரும் நாடுகளுக்கு வழி காட்டியாக ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில், தற்பொழுது அரசாங்கம் ஆரம்பக் கல்விக்கு வசதிகளை ஏற்படுத்தும் வண்ணம் பல திட்டங்களை கடைபிடித்து வருகின்றது. கட்டாயக் கல்வி திட்டங்கள் இப்பொழுது பல மாநிலங்களில் அமுல்படுத்தப்படுவதோடு வயது வந்தோர் கல்வித் திட்டமும் மிகப் பெரிய அளவில் செயல்படுத்தப்படுகின்றன. ஆயினும் அதே நேரத்தில் இம்மக்கள் ள் பள்ளி கல்விக்குப் பின், தொடர்ந்து படிக்கும் பழக்கத்தை கடைப்பிடிப்பதற்கான வழி வகைகள் செய்து தர வேண்டியது அத்தியாவசியமாகின்றது. இக்கல்வி வெறும் எழுத்தறிவோடு மட்டுமன்றி தங்களது எதிர்காலப் பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்திகட கொள்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தற்பொழுது நம்மிடையே காணப்படாத படிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்த நன்கு பராமரிக்கப்பட்ட நூலகத்தை ஒவ்வொரு தனி மனிதனும் பயன்படுத்தும் அளவிற்குச் சீர் செய்ய வேண்டும். இத்தகைய வசதிகள் நம்முடைய ஊரக மக்களுக்குச் செய்து தரப்படுகின்ற நாள் வரை அவர்களின் கல்விக்காகச் செலவு செய்யப்படுகின்ற பணம் எந்த வகையிலும் பலனளிக்காது. நல்ல வாய்ப்புகளைப் படித்த மக்களுக்கு ஏற்படுத்தித் தருகின்ற இடங்கள் நூலகங்களே! ஆகையால் ஊரக மக்களுக்காக அருகாமையில் நூலகம் என்கின்ற திட்டத்தை அரசு அறிவித்திருப்பது குறித்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த 8.10.92 அன்று முதல் முதலாக நடைபெற்ற முதன் மந்திரிகளின் ஊரக வளர்ச்சிக் கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசுகையில் பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் ஊரக வளர்ச்சியில் தனி கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார். மற்ற எந்த திட்டத்தை காட்டிலும் ஊரக வளர்ச்சி மிக முக்கியமான திட்டம் என்று கூறினார். ஊரக மேம்பாட்டுத் திட்டங்களை வகுக்கையில் ஊரக வளர்ச்சிக்கென ஒரு குறிப்பிட்ட

தொகையை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்க வேண்டும். இத்தொகை ஊரக மக்களின் அறிவுத் தேவைக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் உள்ள முப்பதாயிரம் கோடி ரூபாயில் ஆறு முதல் எட்டு சதவிகிதம் வரை ஊரக நூலக மற்றும் சமூகவள மையத்தின் பராமரிப்புக்கென ஒதுக்க வேண்டும். இது தவிர விவசாயம், சுகாதாரம், கல்வி, நல்வாழ்வுத்துறை அமைச்சகங்கள் கூட்டாக இம்மையங்களின் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்குமேயானால் அவர்களுடைய பொது திட்டங்கள் நிறைவு பெறுவது எளிதாகும். இம்மையங்கள் நூலக வசதிகள் தருவதோடு அன்றி ஊரக மேம்பாட்டிற்கும் உதவுகின்றன. இம்மையங்களின் முக்கிய நோக்கம் யாதெனில் இத்திட்டங்கள் மூலம் பயன்பெறும் அனைவரும் இத்திட்டங்களுக்கு உதவவேண்டும் என்பதேயாகும். ஊரக மக்களுக்கு அத்தியாவசிய அறிவு மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் பற்றிய தகவல்கள் தக்க நேரத்தில் கிடைக்கப் பெற வேண்டும். இம்மக்களுக்கான கல்வி மற்றும் தகவல்கள் அம்மக்களின் மேம்பாட்டுத் திட்டங்களோடு ஒருங்கே கிடைக்க வேண்டும். எத்தகைய வளர்ச்சித் திட்டங்களும் யாருக்காக வகுக்கப்பட்டதோ அவர்கள் புரிந்து கொள்ளவோ, பாராட்டவோ பங்கெடுத்துக் கொள்ளவோ இயலாத நிலையில் வெற்றி பெறுவது கடினம். ஊரக நூலக மற்றும் சமுதாய வள மையங்களின் சலுகைகள், அத்தியாவசியமான அடித்தளமாக மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்குப் பயன்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. "நுலக மற்றும் தகவல் வகைகளின் தேசியக் கொள்கை குழு", அறிக்கையில் ஊரக மற்றும் கிராம நூலகங்களுக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. செயல் திட்டங்களை வகுப்பதற்கு என அமைக்கப்பட்ட குழுவின் மீதான தனது கருத்தைக் கூறுகையில், தேசிய கொள்கை குழு *2001*-ஆம் ஆண்டுக்குள் ஊரக நூலகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. மத்திய மாநில அரசுத் துறைகள், சுகாதாரம், குடும்பக்கட்டுப்பாடு, சமூக நலம், கல்வி, தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகங்கள், தேசிய எழுத்தறிவு நிறுவனம் மற்றும் மாவட்ட கல்வி மற்றும் பயிற்சித்துறை ஆகியன கூட்டாகத் தங்களது நிதி வளங்களை ஒன்று சேர்த்து வட்டார சமூக நூலகங்களை ஏற்படுத்த வேண்டும். மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சகம் வருகிற எட்டாவது ஐந்தாண்டு கால திட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு சமூக நல மையம் என்ற திட்டத்தை

அறிவித்துள்ளது. இத்தகைய மையங்களுக்கு நூலக வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கு கலாச்சார மற்றும் ஊரக வளர்ச்சித் துறை உறுதியளித்துள்ளது. நம்முடைய ஊரகப் பள்ளிகள் எவையும் நூலக வசதிகள் இல்லாத காரணத்தினால் அத்தகைய பள்ளிகள் ஊரக நூலக மற்றும் சமூக நலமையங்களோடு தொர்பு வைத்திருக்க வேண்டும். இம்மையங்கள் வயது வந்தோர் கல்வியிலும் நன்கு உதவ முடியும்.

1991-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் எழுத்தறிவற்றோரின் சதவிகிதம் *33.6* என உள்ளது. இதில் *15-35* வயதுக்குட்பட்ட எழுத்தறிவற்றோரின் சதவிகிதம் *11.2* கோடி. இவற்றில் எழுபது லட்சம் பேர் மார்ச் *92*-க்குள் எழுத்தறிவு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. வருகிற எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மீதமுள்ள *10.5* கோடி பேர்களை எழுத்தறிவிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். இத்தகைய மிகப் பெரிய எழுத்தறிவு திட்டத்திற்குப் பரவலான நூலகத் திட்டங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாடும் அவசரமான அவசியமாகின்றது. மக்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சியில் ஈடுபாடு உள்ள கொடை வள்ளல்களின் உதவியை மற்றும் பொதுத் தொண்டில் ஈடுபாடு கொண்டோரின் பணியை அரசுகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டால் குறியிட்ட இலக்கை நிச்சயம் அடையலாம். *1988*-ல் ஆரம்பிக்கப்பட்ட தேசீய எழுத்தறிவிப்பு பணி மற்றும் நாடு முழுவதும் பரவலாகத் தொடங்கப் பெற்ற *32,000* "ஜன் சிக்ஷா" நிலையங்கள் மற்றும் எழுத்தறிவிப்பில் பொது நல இயக்கங்கள் காட்டி வரும் ஈடுபாடு ஆகியவை முன்னேற்றத்தின் நல்ல அறிகுறிகளாகும். முன்னாள் ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநர் திரு. ஜக்மோகன் கூறியது போல 'கற்கும் நாடே முன்னேறும்', என்பதற்கேற்ப நாம் ஒவ்வொருவரும் எழுத்தறிவிப்பு பணியில் ஈடுபட்டு, நாம் மட்டுமல்ல நமது நாட்டையும் இருபத்தோறாம் நூற்றாண்டை நோக்கிச் சற்று வேகமாகவே அழைத்து செல்வோம்.

சிறுவர் நூலகங்கள் :

இந்தியாவை சிறுவர் இலக்கியத்தின் பெட்டகம் என்று வர்ணிக்கலாம். சிறுவர்களை இத்தனை நூற்றாண்டுகளாகக் கவர்ந்த பஞ்சதந்திர மற்றும் கீதா உபதேச கதைகள் மிகச் சிறந்த உதாரணமாகும். குழந்தைகளை மகிழ்விக்கும் புத்தகங்கள்,

அவர்களைச் சென்றடைவதில் எந்தவிதமான தடையும் இருக்கக் கூடாது. பரோடாவின் மத்திய நூலகத்தில் மகாராஜா மூன்றாவது சயாஜிராவ் கெய்க்வாட் அவர்களின் ஆதரவினால் குழந்தைகளுக்கென தனிப்பகுதி ஒதுக்கப்பட்டது. இராஜஸ்தான் மற்றும் ரூர்கி பல்கலைக் கழகங்களும் தங்களது மத்திய நூலகத்தில் இத்தகைய தனிப் பகுதிகளைக் கொண்டுள்ளது. டில்லி பொது நூலகத்திலும், கல்கத்தா தேசிய நூலகத்திலும் உள்ள சிறுவர் பகுதி மிகவும் பிரசித்தி பெற்றது. 'மன்மோகன்பால் புஸ்தகாலய' மற்றும் 'சிறுவர் புத்தக அறக்கட்டளை', நூலகமும் சிறுவர் கூட்டத்தைக் கவர்ந்துள்ளன. இதைப் போல அங்கும் இங்குமாக ஓரிரு முயற்சிகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. சிறுவர் நூலகங்களின் இத்தகைய நிலையே சிறுவர் புத்தக அறக்கட்டளை (CBT) மற்றும் குழந்தை எழுத்தாளர்களின் கூட்டமைப்பு (AWIC) போன்ற அமைப்புகளை ஏற்படுத்த குழந்தை இலக்கிய மேதை சங்கர் அவர்களைத் தூண்டியது. மேற்கூறிய இந்த அமைப்பு டில்லி, உத்திரப்பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கான நூலகங்களை நடத்தி வருகிறது. இந்த அமைப்பு தற்பொழுது தனது புதிய திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதி மற்றும் உள்ளடங்கிய ஊரகப் பகுதிகளை பராமரிக்கின்றது. இத்தகைய திட்டங்கள் பொதுநல தொண்டர்களின் உதவியுடன் அவரவர் இல்லங்களிலேயே நூலகங்கள் போல் செயல்பட்டு வருகின்றது. இந்த அமைப்பின் (AWIC) இத்தகைய முயற்சிகள் பாராட்டுக்குரியது.

பள்ளி நூலகங்கள்

அகில இந்தியக் கல்வி கணக்கெடுப்பின்படி (தேசியக் கல்வி ஆராயச்சி மற்றும் பயிற்சிகுழு', (NCERT) நடத்தியது) அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு நிலையில் உள்ள கல்வி நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை *2,44,996*. இதில் *2,00,149* பள்ளிகள் (*82.06%*) கிராமப்புறங்களிலும், *44,847* பள்ளிகள் (*17.04%*) நகர்ப்புறங்களிலும் உள்ளது. இத்தனை பள்ளிகளில், பாதிக்கும் சற்று குறைவான, அதாவது (*41.08%*) பள்ளிகளில் மட்டுமே அரசு கணக்குப்படி நூலகங்கள் அமைந்துள்ளன. இந்த கணக்கிலும் *29.05* சதவிகித பள்ளிகளில் மட்டுமே நூலகங்கள் என்று நம்பும் அளவிற்குச் செயல்படுகின்றன; மற்றவை பெயருக்கு மட்டுமே நூலகங்கள். நகர்ப்புற பள்ளிகளின் எண்ணிக்கை

கிராமப்புறங்களை விடக் குறைவாக இருந்தாலும் நூலக வசதிகளை பொறுத்தவரையில் 588.28 சதவிகிதம் என்று முன்னனியில் உள்ளது. 80 சதவிகித பள்ளிகளைக் கொண்டிருந்தும் கிராமங்களில் நூலக வசதிகள் 38.72 சதவிகிதம் மட்டுமே. பல்வேறு நிலை பள்ளிகளின் நூலக விவரங்கள்:

ஆரமப்பபள்ளி	-	1,47,699	-	32.41%
நடுநிலைப் பள்ளி	-	54, 052	-	59.61%
உயர் பள்ளி	-	31,144	-	94.05%
உயர்நிலைப் பள்ளி	-	9,101	-	95.75%

மேலே கணக்குப்படி ஆரம்ப நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகள் எவ்வளவு குறைவாக உள்ளது என்பது தெளிவாகின்றது. வளருகின்ற பருவத்தில், கற்க வேண்டிய பருவத்தில் இத்தகைய பஞ்சம் நிலவுமேயானால் இந்தியாவின் வருங்காலத் தூண்களின் அஸ்திவாரம் மிகவும் பலவீனமாக இருக்கும். அனைத்து நிலைப் பள்ளிகளையும் கூட்டி கழிக்கும் பொழுது நூலக வசதிகள் உள்ள பள்ளிகளில் 93,279 (62.8%) உள்ள நூல்களைப் பார்க்கும் பொழுது ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள நூல்களின் எண்ணிக்கை நூறுக்கும் குறைவானதே. பெரும்பாலும் 1,28,519 பள்ளிகளில் (87.01%) உள்ள நூல்களின் எண்ணிக்கை 250க்கும் குறைவே. ஆயிரம் புத்தகங்கள் மற்றும் அதற்குமேல் என்று எல்லைக்கோடு போட்டால், லட்சக்கணக்கான பள்ளிகளில் 2,788 பள்ளிகள் மட்டுமே இதில் அடங்கும்.

இத்தகைய புள்ளி விவரங்கள் நமக்கு, உணர்த்துவதை விட அதிகமாக அதிர்ச்சி அளிக்கின்றன. இவ்வாறு இயங்கும் நூலகங்களில் நிர்வாகம் எப்படி உள்ளது என்று பார்ப்போம். மொத்தம் உள்ள 1,47,699 ஆரம்ப நிலைப் பள்ளி நூலகங்களில் 1,25,679 நூலகங்கள் அந்தப் பள்ளிகளின் ஏதாவதொரு ஆசிரியரின் நிர்வாகத்தின் கீழ் விடப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாணவர்களைக் கவனிப்பதற்கே நேரம் இல்லை; இப்படிப்பட்ட பகுதி நேர நூலகர்கள் காலையில் நூலகத்தை திறந்து பின் மாலையில் பூட்டுபவர்களாகத் தான் இருப்பார்கள். இவற்றில் 838 மட்டும் முழுநேர நூலகரின் பணியினால் நூலகமாக இயங்குகிறது. பள்ளிகளின் உயர்மட்ட குழுவில் இருக்கும் உயர்ந்தவர்கள் இந்த நிலையைப் பற்றி சிந்தித்து ஆராய்ந்து நூலகம் என்றால் நூலகர்

என்று ஒருவர் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்களேயானால், குழந்தைகள் சொன்னதைத் திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளை என்ற நிலையிலிருந்து அறிவுப் பசியைப் போக்கிகொள்ள இரைதேடும் சிங்கமாக மாறலாம். இத்தகைய ஒரு முயற்சியில் குழந்தைகளைச் சரியானபடி வழி நடத்தி அவர்களுக்கும் நூலகங்களுக்கும் நூல்களுக்கும் உள்ள இடைவெளியை ஒரு நூலகரால் மட்டுமே குறைக்க இயலும். இனிமேலாவது ஒவ்வொரு பள்ளி நூலகத்திலும் இரண்டு முழு நேர ஊழியர்களாகவது (ஒரு நூலகர்; உதவியாளர்) இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். திறந்தமுறை நூலகமாயிருந்தால், இந்த இருவர் கூடப்போதாது. ஆனால் நூலகத்திலுள்ள நூல்கள் முழுவதும் சரியான சிறந்தமுறையில் பயன்படுத்தப்பட வேண்டுமானால், திறந்தமுறை நூலகமுறையே சிறந்ததாகும்.

ஆரம்ப நிலையிலேயே உயர்தரமான கல்வியை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நாடு முழுவதும் துவக்கப்பட்ட 275 நவோதயா பள்ளிகளில், மார்ச் 31-1991 முடிய சுமர் 65,000 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இத்தகைய கல்வி நிறுவனங்களில் நூலகங்களின் நிலை போற்றும்படி இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இதனைப் பற்றிய கணக்கெடுப்பு இன்னும் கிடைக்காததால் இதற்கு மேல் கூற இயலவில்லை. தேசிய புத்தக அறக்கட்டளை (NBT) நாடு முழுவதும் உள்ள ஆரம்ப பள்ளிகளுக்கு ஒரே மாதிரியான ஆனால் அத்தனை துறைகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் ஒரு . நூற்பட்டியல் தயாரித்து கரும்பலகைத் திட்டத்தின் கீழ் (OB) வழங்க உள்ளது. மற்றும் தேசிய புத்தக அறக்கட்டளையின், "நேரு பால் புஸ்தகாலய" மற்றும் "ஆதன் பிரதான்" போன்ற சிறுவர் நூல்கள் சம்பந்தப்பட்ட திட்டங்களும் நடைபெற்ற வண்ணம் உள்ளது. இத்தகைய செய்திகள் ஓரளவு நம்பிக்கையூட்டுகின்றன. இனிமேல் பள்ளி நூலகங்களில் கீழ்கண்டவாறு நூலகர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஆரம்பப் பள்ளி -	நூலகர் (துணை ஆசிரியர் நிலை)	- 1
	நூலக உதவியாளர்	- 1
நடுநிலைப் பள்ளி -	நூலகர் (TGT Grade)	- 1
	நூலக உதவியாளர்	- 1

உயர் பள்ளி	-	நூலகர் (TGT Grade)	- 1
		நூலக உதவியாளர்	- 1
உயர்நிலைப் பள்ளி	-	உயர்நிலை நூலகர் (PGT Grade)	- 1
		துணை நூலகர் (TGT Grade)	- 1
		நூலக உதவியாளர்	- 1

ஊரக நூலக மற்றும் சமுதாயவள மையம் மற்றும் பள்ளி நூலக இணைப்பின் அவசியம்

மத்திய, மாநில அரசுகள் கிராமப்புற மேம்பாட்டிற்கு போடும் திட்டங்களை, ஊரக நுலக மற்றும் சமுதாய வள மையத்தோடு (RLCRC) இணைந்து நிறைவேற்றினால் திட்டங்கள் செயலாக மாறுவது சற்று விரைவாகவும் எளிதாகவும் நடைபெறும். அதைப்போல் RLCRC மையங்களை மாவட்ட நூலக அமைப்புகளோடு (DL) இணைப்பதும் அவசியமாகும். ஏனெனில் மாவட்ட நூலக அமைப்புகள் நகர மற்றும் கிராமப்புற பொது நூலகங்களைத் தன் நேரடிப் பார்வையில் வைத்துள்ளது. இதனால் அரசுத் திட்டங்கள் (RLCRC) மற்றும் (DLS) அமைப்புகளோடு இணையும்போது பொது மக்களின் பரவலான ஈடுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. அதாவது எழுத்தறிவுத் திட்டம் வெற்றிபெற்றால் நூலகங்களின் பயன் அதிகரிக்கும். அதன்மூலம் மக்களின் விழிப்புணர்வு சமுதாய மற்றும் பொது நலவாழ்வில் உள்ள குறை நிறைகளை உணர இயலும். இதன் மூலம் ஒவ்வொரு குடிமகனும் தன் கடமையை உணர்ந்து செயல்படுவான். இது பின்னர் ஒட்டுமொத்தமான வளர்ச்சியில் முடியும். எழுத்தறிவிப்பில் காட்டப்படும் வேகம் சிறுவர் கல்வி மற்றும் ஆரம்ப பள்ளி நூலகங்களிலும் காட்டப்படுமேயானால் நாட்டின் வளச்சி வேகமாக மட்டுமல்லாது அடித்தளமும் பலமாக அமையும்.

நவீன இந்தியாவை உருவாக்க, நம் குழந்தைகளின் உற்சாகத்திற்கு உரமிடும் வகையில் ஊரகப்பள்ளி, மற்றும் சிறார் நூலகங்கள் பெருக்கத் திட்டம் செம்மையாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

"படிப்பாளிக்குப் பயனுள்ள நூல்"

பல்கலைக் கழக நூலகர்களின் சமூகநிலை

திருமதி C.N. திலகவதி *
திருமதி மனோரமா ஸ்ரீநாத் **

நூலகங்கள், திட்டமிட்ட சமூக அமைப்பின் ஒரு அங்கமாக விளங்கியபோதிலும், அச்சமூகத்தாலேயே அலட்சியப்படுத்தப் பட்டு, கீழ்நிலைக்குத் தள்ளப்பட்ட ஒன்றாகும். நூலகர்களின் மதிப்பினை உயர்த்துவதற்குப் பல கருத்தரங்குகளும், கூட்டங்களும் நடைபெற்றபோதிலும், நடைமுறையில், நூலகர்களின் சமூக மதிப்பில் எதிர்பார்த்த அளவிற்கு ஏற்றம் ஏதும் ஏற்படவில்லை. மேலும், நூலகர்களின் மதிப்பு, அறிவு ஆகியவை ஆற்றல் மிக்க சமூகத்தில் சிறிது சிறிதாகத் தாழ்ந்து கொண்டே வருகின்றன என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இது மட்டுமின்றி, நம் நாட்டில் குறிப்பாகத் தென்னிந்தியாவில், நூலக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நூலக நிர்வாகத்திற்கு இரண்டாந்தர முக்கியத்துவத்தையே தருகிறார்கள் என்பது நம் நூலகர்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அதிகாரிகளின் இந்த மாற்றாந்தாய்த் தன்மை நூலகங்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கிறது. நிதி நிலையில் பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம், நூலகத்திற்குப் பொதுவாக நிதி ஒதுக்கீடு குறைந்தே வழங்கப்படும். இதற்கு முக்கிய காரணம், நூலகங்கள் நிதி திரட்டும் நிறுவனங்கள் அல்ல. மாறாக அவை செலவு செய்யும் நிறுவனங்கள் (Spending institutions). அவை நிறுவனங்களும், அரசும் தரும் மான்யத்தால் நிர்வகிக்கப்படுவதால், நிதி பற்றாக்குறை எப்போதுமே ஏற்படுகிறது. இதற்கு அதிகாரிகளை மட்டும் குறை கூறமுடியாது. நூலகங்களை லாபநோக்குடைய நிறுவனங்களாக (Profit Oriented Organizations) மாற்றினால் இந்த நிதி பற்றாக்குறை நிலமை முற்றிலும் மாறும். ஆனால் இதற்குப் பொதுமக்களோ அல்லது ஆராய்ச்சியாளர்களோ சிறிதும் ஒப்புதல்

---

* துணை நூலகர், சென்னை பல்கலைக்கழக நூலகம், சென்னை

** விரிவுரையாளர், நூலகவியல் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

அளிக்கமாட்டார்கள். மேலும், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள் அல்லது மாணவர்கள், நூலகத்தில் இருக்கும் குறைகளைச் சுட்டிக்காட்ட முன் வருவார்களேயன்றி, அக்குறைகள் எக்காரணங்களால் ஏற்படுகின்றன என்பதை ஆராய்ந்து, அதிகாரிகளிடம், இதைப்பற்றி விவாதித்து, நூலகங்களை மேன்மையுறச் செய்வதற்குரிய வழியைப் பின்பற்றத் தவறிவிடுகிறார்கள்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் நூலகர்கள், கல்வியாளர்கள், அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் நிறைந்த சமூகத்தில் எந்த அளவிற்கு நூலகர்கள் மதிப்பில்லாமல் இருக்கிறார்கள் என்பதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நூலகத்துறையில் கணிப்பொறியினால் (கம்ப்யூட்டரினால்) ஏற்பட்ட புதிய மாற்றங்கள் :

நூலகங்கள் நாளுக்கு நாள் இயந்திரமயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நவீன சமூகம், காகிதமற்ற, மின்மயமான, (Paperless - Electronic Society) ஒன்றாக மாறிக்கொண்டு வருகிறது என்பதனை நூலகர்கள் தெள்ளத்தெளிய அறிவார்கள். காகித வடிவத்திலிருக்கும் புத்தகங்கள், தற்போது கம்ப்யூட்டர் நாடா (Tapes) டிஸ்க்ஸ் (Discs) மைக்ரோ பிலிம் (Microfilm) மைக்ரோபிட்ச் (Microfiche) என்ற வடிவில் உருவாகிக் கொண்டிருக்கிறது. இப்போது நூலகத்தில் கணிப்பொறி (கம்ப்யூட்டர்) மிகமிக முக்கியமான சாதனமாகக் கருதப்படுகிறது. அதனால் எத்தனை பல்கலைக்கழக நூலகங்கள் கம்ப்யூட்டரை உபயோகிக்கின்றன என்று பார்க்கும்போது, தென்னிந்திய பல்கலைக்கழக நூலகங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றன. ஆயினும் தற்போது சென்னைத் தொழிற்துறை நூலகம், (M.I.T) அண்ணா பல்கலைக்கழக நூலகம், இந்திய தொழில்துறை நூலகம் (IIT) போன்றவை தங்கள் நூலகப் பணிகளை இயந்திரமயமாக்கியுள்ளன. இவற்றைத் தவிர, சென்னை மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகங்கள், தங்கள் நூலகப் பணியினை இந்திரமயமாக்கிக் கொள்ள முயன்றுவருகின்றன.

ஆந்திரா, மைசூர், கேரள மாநிலங்களிலும் இதே நிலைதான் நிலவுகிறது. தகவல்கள், இப்போது மிக விரைவாகவும், விளக்கமாகவும் கம்ப்யூட்டர் மூலம் (On - Line Information Service

& E - Mail Service etc.) கிடைக்கப் பெறுகிறது. நூலகர்கள், இதை உணர்ந்து, புதிய தொழில் நுட்பங்களைக் கற்றுத்தேர்ந்து, விரைந்து மாறும் காலத்திற்கேற்பத் தங்களை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

மேல்நாட்டு நூலகங்களில் கணிப்பொறி சேவை மிகத்திறமையாக நூலகர்களால் மேற்கொள்ளப்படுவதால், அவர்கள் மதிப்பு கல்வியாளர்களின் சமூகத்தில் மிகவும் உயர்ந்து விட்டதாகச் சில ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன.

நூலகர்களின் மதிப்பினை நூலகத்தை உபயோகிப்பவர்கள், சரியான முறையில் அறிந்துகொள்ளாமை

ஒரு பல்கலைக் கழகத்தில் நடந்த ஒரு நேர்முகப் பேட்டியில், அந்நூலகப் பணியாளர்கள் அனைவருமே தங்களின் முக்கியத்துவத்தைப் பல்கலைக் கழக அறிஞர்கள் யாவரும் அங்கீகரிப்பதில்லை என்றே கூறினர். இது எதனால் என்றால், அவர்களின் பணி, மிக எளிமையான குமாஸ்தாவின் பணி போன்று தோன்றுவதும், கல்வியாளர்கள், அவர்களது சேவையினை ஏற்று பாராட்டாததுமாகும். கல்வியாளர்களிடம் நடத்திய, ஓர் ஆய்வின்படி, 22% கல்வியாளர்கள், நூலகப் பணியாளர்களைத் தங்களுக்குச் சமமாகவும் (Pass with teaching staff) 56% பேர், அவர்களை நூலகத்துறையாளர்களாகவும் (Library Professionals) மதிக்கின்றனர். மேலும், 5% பேர் அவர்களை சாதாரண குமாஸ்தாக்களுடனே சேர்க்கிறார்கள். இதேபோல், நூலகப் பணியாளர்கள் 80% தங்களை நூலகத்துறையாளர்களாகவும் (Professionals) 20% தங்களை ஆசிரியர்க்கு இணையானவர்கள் (Pass with teachers) என்றும் எண்ணுகிறார்கள். தற்போது பல்கலைக்கழக மான்யகுழு, துணை நூலகர்களைப் பல்கலைக்கழக ஆசிரியர்களுடன் இணைத்து அவர்களின் நிலையினை உயர்த்தியுள்ளது. இதனடிப்படையில் துணை நூலகர்களுக்கு அடுத்த நிலைப்பணியாளர்களும் தங்களின் மதிப்பினை உயர்த்திக்கொள்ள விழைகின்றனர். அதற்கு, நூலகப்பணியாளர்கள் தங்களை நூலகத்துறையாளர்களாக மட்டும் நினைக்காமல், ஆய்வு வழிகாட்டிகளாகவும், (Research Guide) நினைத்து செயல்பட வேண்டும். எவ்வாறெனில் நூலகர்கள், ஆசிரியர்கள் போன்று நூலகத்தைப் பயன்படுத்துவருக்குத் தகுந்த, தேவையான, தகவல்களையோ, அன்றி செய்திகளையோ, தக்க நேரத்தில், நூலகத்தின் பலதிறப்பட்ட நூல்களிலிருந்து, ஒன்று

திரட்டித் தரவேண்டும். அல்லது அவற்றினை அவர்களே அறிந்துகொள்ள சிறப்பான முறையில் அவர்களை வழிநடத்த வேண்டும். மேலும் இவர்கள், விற்பனையாளர்களைப்போன்று (Sales man) படிப்பவர்களைக் கவர்ந்து, மற்ற விற்பனையாளர்கள், தங்கள் பொருட்களை நுகர்வோருக்கு பலவாறு பேசிவிற்பதுபோல், தங்கள் நூலகத்திலிருக்கும் தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.

நூலகர்கள், நடுநிலையாளர்களாகி (Middle man), தகவல்களுக்கும் அவற்றைப் பயன்படுத்துவோருக்கும் இடையே ஒரு தூதரைப்போல் பாலம் அமைத்து, இரண்டையும் இணைத்துச் செயல்படவேண்டும். மேலும், அவர்கள் கல்வி அறிஞர்களைத் திருப்திபடுத்தி அவர்களின் அறிவுப்பூர்வமான, ஆக்கப்பூர்வமான ஆராய்ச்சிகளுக்குத் தங்களின் பணியின் முக்கியத்துவத்தை உணரச் செய்ய வேண்டும்.

அதிகாரிகளின் பங்கு

நூலக அதிகாரிகளால், நூலகத்தை, செய்திகள் சேகரித்து, முறைப்படுத்தி வெளிப்படுத்தும் ஒரு முழுமையான நிறுவனமாக நினைக்க வேண்டுமேயன்றி, அதனை வேறு ஒரு பெரிய நிறுவனத்தின் சிறு பகுதியாக நினைத்து அலட்சியப்படுத்தக்கூடாது. அதிகாரிகள், நூலகங்களும் ராணுவம் போன்று ஒரு நாட்டிற்கு மிகமிக முக்கியமான ஒரு நிறுவனம் என்று கருதி அதன் நிர்வாகத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டும். இராணுவம் நாட்டைப் பகைவர்களிடமிருந்து காக்கிறது. நூலகங்கள், நாட்டிற்குத் தேவையான ஆக்கபூர்வமான பணிகளுக்கு, ஆராய்ச்சிகளுக்கு, தகவல்களைச் சேகரித்துத்தந்து, நாட்டின் நிலமையை உயர்ந்த உதவி புரிகிறது. ஆய்வாளர்களுக்கு, அவை ஒரு ஆராய்ச்சிக்கூடம் போன்று பயன்படுகிறது. நூலகங்களில் இருக்கும் செய்திகளைப் படித்து ஆராய்ந்து, வேண்டிய விஷயங்களைச் சேகரித்த பின்னரே, ஆராய்ச்சிக்கூடங்களின், அறிவுபூர்வமான, ஆக்கபூர்வமான ஆராய்ச்சிகளைத் துவங்க வேண்டும். ஆராய்ச்சிகளைச் சரியாக நடத்தி, அவற்றில் வெற்றி பெற, புத்தகங்கள் பலவித நூல்களின் துணை கண்டிப்பாகத் தேவை என்பது எல்லோரும் அறிந்ததே !

ஆகவே, அதிகாரிகள், நூலகங்களை அலட்சியப்படுத்தி ஒதுக்காமல் அவைகளும் ஒரு நாட்டின் ஆக்கப் பணிகளில்

பொறுப்பேற்கும் ஒரு நிறுவனமாகக் கருதி, அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டுக்குத் தகுந்த ஒரு கொள்கையை ஏற்படுத்த வேண்டும். நூலகங்களின் நிர்வாகத்தில் அதிகக் கவனம் செலுத்தி அவை சிறப்பாகச் செயல்பட அதிகாரிகள், நூலகர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

முடிவுரை

நூலகர்களின் தகுதிநிலையினை நிர்ணயிப்பவையாகக் கருதப்படுவது யாதெனில் :

1. தொழில் நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகளைக் கற்று, தேர்ந்து, அவற்றை நூலகங்களில் பயன்படுத்தித் தங்கள் பணி நிலையை மேன்மையுறச் செய்தல்.
2. நூலகர்கள், தங்களை ஒரு ஆராய்ச்சி வழிகாட்டியாகக் கருதி, ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிபுரிதல்.
3. ஒரு விற்பனையாளர் போன்று தங்கள் நூலகத்திலிருக்கும் செய்திகளைச் சேகரித்துத் தொகுத்து, விளம்பரப்படுத்தி, அதைப்பிறர் மேன்மையுறப் பயன்படச் செய்தல்.
4. ஒரு நடுநிலைமையாளர் அல்லது தூதர் போன்று கருதி நூல்களுக்கும், பயன்படுத்துவோருக்கும் ஒரு பாலம் அமைத்து செயல்படுதல்.
5. ஆக்கப்பூர்வமான ஆராய்ச்சிகளுக்கு உறுதுணையாக நின்று, தங்கள் பணியின் முக்கியத்துவத்தை மற்றவர்கள் உணரச் செய்தல்.
6. நூலகத்துறை அதிகாரிகளை, அடிக்கடி சந்தித்து நூலகத்தின் நிர்வாகத்தில் மேலும் கவனிப்பும் அக்கறையும் காட்ட வேண்டுகோள் விடுத்தல்.

நூலகங்கள், மேற்கூறியவற்றை உணர்ந்து தங்களைக் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றிக் கொண்டு, இந்த நவீன கம்ப்யூட்டர் உலகம் போகும் வேகத்திற்கு ஈடுகொடுத்துத் தங்களின் இன்றியமையாமையை, எல்லோரும் உணரச்செய்யுமாறு, தங்கள் பணியினை செம்மையுறச் செய்ய வேண்டும்.

அதற்கு உண்டான ஊக்கமும், வசதிகளும் அதிகமாக கிடைக்கப்பெறாவிட்டாலும், நூலகர்கள், விடாமுயற்சியுடன் செயல்பட்டு, தங்கள் நிலையை இந்தச் சமூகத்தில் உயர்த்திக்கொள்ள வேண்டும்.

Reference

Manorama Srinath : Entropy of Librarianship in Denarajan G. Ed., Professional Librarianship, Ess, Ess Publication, New Delhi, 1991, pp 94, 97.

ஆவணக்காப்பகத்தில் நூலகர் பணி : ஓர் ஆய்வு

மு. இராஜேந்திரன் எம்.எல்.ஐ.எஸ்.சி *

நூலகங்கள் ஏதோ புத்தகங்களை அடுக்கி வைக்கின்ற இடம் என்ற நிலை மாறிவிட்டது. அது சரியான செய்திகளை விரைவாக வழங்கும் செய்திக் கருவூலமாக மாறி விட்டது. இக்காலகட்டத்தில் அங்கே பணி புரியும் நூலகர் சிறப்பான பயிற்சியினைப் பெற்றவராக, இருக்கவேண்டும். அப்போதுதான் உன்னதமான பணியினைச் செய்யும் பக்குவமும் பாங்கும் அவர் பணியிலே மிளிரும். நூலகங்களில் மூன்று வகையுண்டு. அவை 1) பொது நூலகங்கள் 2) கல்வி நிலையங்களைச் சார்ந்த நூலகங்கள் மற்றும் 3) சிறப்பு நூலகங்கள் எனப்படும். சிறப்பு நூலகங்கள் என்பது ஒரு குறிப்பிட்ட சாரருக்கு மட்டும் அவர்களுடைய மிக ஆழமான சிந்தனைக்கு ஏற்ற அனைத்து செய்திகளையும் அளிக்கக்கூடிய சக்தியினைக் கொண்டதாகும். இதனை நிறுவகிக்கும் ஆற்றலும், அங்கே தகவல்களை சேகரிக்க வருகின்ற அறிஞர் பெருமக்களுக்கு தேவைக்கேற்றும், கால விரையம் ஆகாததும் ஆன பணியிலக்கினை செம்மையாக முடிக்க, நூலக அறிவியலில் தெளிவுடைய ஒருவரால்தான் முடியும்.

ஆவணக்காப்பகம் என்றால் என்ன?

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த டி.ஆர். ஷெல்லன்பர்க் என்ற வல்லுனர் "கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டதும் ஒரு நிறுவனத்தின் நடைமுறைப் பத்திரங்கள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்கால சந்ததியினருக்காக ஒரு குறிப்பிட்ட இடத்தில் பராமரிப்பு செய்வதே ஆவணக்காப்பகம்"[1] என வரையரை செய்கிறார். மேலும் "பொது ஆவணங்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

---

* முதல் நிலை நூலக உதவியாளர் (தேர்வு நிலை) தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை - 600 008

1. ஷெல்லன்பர்க். டி.ஆர். மாடர்ன் ஆர்க்கைவ்ஸ் - 1956 - பக்கங்கள் 11-12.

ஆவணங்களையும் பாதுகாக்கின்ற இடம்" எனவும் விளக்குகிறார்.

ஆக அரசு மற்றும் தனியார் நிர்வாகத்தில் செய்கின்ற பணியினை உள்ளடக்கிய கோப்புகளை தங்களுடைய எதிர்கால பணியினைச் செய்ய கடந்தகால முன்னுதாரணங்களை எதிர்கால சந்ததியினர் சான்றாக எடுத்துக் கொள்ளக்கூடியதும் அவற்றை போற்றிப் பாதுகக்கின்ற இடமுமே ஆவணக்காப்பகம் ஆகும்.

ஆவணக் காப்பகத்தைப் பற்றி முன்னாள் அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி 'அவர்கள் கூறுகையில், "நாட்டின் புணரமைப்பிற்கும் புரட்சிகர மாற்றத்திற்கும் ஆவணக்காப்பகத்தில் அமைந்திருக்கின்ற பொருள்கள் தகுதிவாய்ந்த செய்தியினைத்தர காத்துக் கொண்டிருக்கின்றன. கடந்தகால அரசு அமைத்தத பல்வேறு குழுக்களின் ஆய்வுரைகளும், அரசுத்துறை நிபுணர்களின் கருத்துகளும், பரிந்துரைகளும் பரிமளித்துக் கொண்டிருக்கின்றன. ஆவணக் காப்பகததிலே இருக்கின்ற நீண்ட நெடுநாளைய கோப்புகள் இன்றைய நடைமுறை அரசு நிர்வாகத்திற்கு கருவியாகப் பயன்படுவது"[2] - என்று குறிப்பிடுகிறார்.

ஆகவே, எவர் ஒருவர் இந்த ஆவணக் காப்பகத்தை முறையாகக் கட்டிக்காத்து அரசின் பணிகளுக்கும், வரலாற்று ஆராய்ச்சிப் பணிகளுக்கும் முறையாக தொகுத்துத் தருகிறார்களோ, அவர்களே "ஆவணக்காப்பாளர்" என அழைக்கப்படுகிறார்.

வரலாறு

ஆவணக்காப்பகமே ஒரு வரலாற்றுப் பெட்டகம்தான். ஆனால் அந்தப் பெட்டகத்தின் வரலாறு கிரேக்கப் பேரரசு காலந்தொட்டே இருந்து வருகிறது. இடைக்காலத்தில் இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து நாடுகளில் பிரசித்தம் பெற்று வளர்ந்து வந்தது. பிரான்சில் நடந்த பிரெஞ்சுப் புரட்சியின் விவரங்களை பாதுகாக்க ஏற்பட்ட முயற்சியே அங்கே ஆவணக் காப்பகத்தை ஏற்படுத்தியது. இவ்வுலகில் 1790-ம் ஆண்டு பாரிசில் முதல் ஆவணக்காப்பகம் தோற்றுவிக்கப்பட்டது. படிப்படியாக லண்டனில் 1838-ல் ஆரம்பிக்கப்பட்ட ஆவணக்காப்பக முறை

2. முத்துச்சாமி, மா. உள்ளத்தித்துறை அமைச்சர். ஆவணக்காப்பக வாரவிழா மலர் 1970. பக்கங்கள் 8-9

அதன் குடியேற்ற நாடுகளுக்கும் பரவியது"[3]. இந்தக் கோட்பாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கி.பி. 1934-ம் ஆண்டுதான் பின்பற்றப்பட்டது.

ஆவணக்காப்பக நூலகம்

ஆவணக்காப்பகம் மற்றும் நூலகப் பணிகளை தனித்தனியே கண்ட நமக்கு ஆவணக் காப்பகத்தில் அனைத்து நூலகம் செய்யும் பணியும் ஆவணக் காப்பகங்களிலும் பின்பற்றப்படுகிறது. அங்கே இருக்கின்ற நூல்களும், செய்யப்படுகின்ற பணிகளும் பிற நூலகப் பணியிலிருந்து சற்று மாறுபடுகிறது. நமது நாட்டில் தலைநகரில் தேசிய ஆவணக் காப்பகமும் ஒவ்வொரு மாநிலங்களில் அந்த மாநில ஆவணக் காப்பகங்களும் நூலகங்களை நல்ல முறையில் பராமரிப்பு செய்து வருகின்றன. அங்கே ஆராய்ச்சியாளர்களுக்கு முதல்தரமான செய்தியனைத் தரத்தக்க மூல நூல்கள் கிடைக்கின்றது.

அவைகளில் சென்னையிலுள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம் தென்கிழக்கு ஆசியாவில் மிகப் பெரியதும், பழமையானதும் ஆகும். இங்கே ஹென்றி டாட்வெல், ஜே.ஜே. காட்டன், ஜி.டி. போக், பி. மெக்குயூன் மற்றும் பி.எஸ். பாலிகா போன்ற வல்லுநர்கள் போற்றி வளர்த்தார்கள். இங்கே லட்சக்கணக்கில் கோப்புகளும் சுமார் 2.5 லட்சம் நூல்களும் இருக்கிறது.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள அறிய நூல்கள் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

1. அரசுத்துறை அறிக்கைகள்,
2. மக்கட்தொகைக் கணக்கெடுப்பு
3. சட்டமன்ற நடவடிக்கைகள்,
4. மாவட்ட விவரச் சுவடிகள்,
5. ஆங்கிலப் பேரரசின் கடிதப்போக்குவரத்தின் பிரதிகள்,
6. குறிப்பேடுகளாகிய அல்மெனாக்ஸ், டைரக்டரீஸ் மற்றும்

---

3. ஷெல்லன்பர்க். டி.ஆர். மாடர்ன் ஆர்க்கைவ்ஸ் - பக்கங்கள் 2-11.

7. அனைத்து பாடங்களும் அடங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடந்த நூற்றாண்டில் வெளியாகிய நூல்களும் அடங்கும்.

இவ்வாறாக இங்கு நடைபெறும் பணிகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. நூல்களைச் சேகரிக்கும் முறை
2. அவற்றைப் பகுத்து தொகுத்து முறைப்படுத்துதல்
3. அவற்றை பாதுகாக்கும் முறை
4. சேவைகள்

நூல்களைச் சேகரிக்கும் முறை

ஆவணக்காப்பக நூலகத்திற்கு தேவையான நூல்கள் விலை கொடுத்து வாங்கப்படுவது இல்லை. அவைகள் 1867-ம் ஆண்டு போடப்பட் ட இந்திய அச்சுக் கூடங்கள் பதிவுச் சட்டத்தின்படி குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்ட அனைத்து அச்சுக்கூடங்களில் அச்சாகும் நூல்களின் இரண்டு பிரதிகள் அந்தந்த மாநில அரசின் புத்தகப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட பிரதிகள் ஆவணக்காப்பகத்திலே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டு, மேலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மதிப்பு மிக்க நூல்களை விலைகொடுத்தும் வாங்கி பயன்படுத்திப் பாதுகாக்கவும் நூலகர் கடமைப்பட்டுள்ளார்.

பெறப்பட்ட நூல்கள் முறைப்படுத்தப்படுதல்

பெறப்பட்ட நூல்களை முறைப்படுத்தும் பணி கடந்த 15 ஆண்டுகளாக செவ்வனே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதற்காக இந்திய நூலகவியல் அறிஞரான எஸ்.ஆர். இரங்கநாதன் அவர்களின் கோலன் பகுப்பு முறையும், சி.சி.சி என்று அழைக்கப்படுகின்ற பட்டியல் அட்டைகள் தயாரிக்கும் பணியும் எவ்வித சிரமமும் இல்லாமல் சுமார் 1.5 லட்சம் நூல்களுக்கு முடிக்கப்பட்டு பட்டியல் அட்டைகளும் பயன்படுத்தப்படுகிறது. எஸ்.ஆர் இரங்கநாதன் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற வேளையில் அவருடன் நெருக்கமானவர்கள் கூட வேறு விதமான பகுப்பு மற்றும் பட்டியல் அட்டைகளைத் தயாரிக்கும்பொழுது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வித்தியாசமான நூல்களை உள்ளடக்கிய இந்த நூலகத்தில் இந்திய

முறை பின்பற்றப்படுவதை நாம் பெருமையாகக் கொள்ள வேண்டும். இந்த முறையை இங்கு பயன்படுத்தியதால் ஏற்பட்ட அனுபவமே ஓர் ஆராய்ச்சி எனலாம்.

முறைப்படுத்தப்பட்ட நூல் பாதுகாக்கப்படுதல்

பெறப்பட்ட நூல்களை பாதுகாப்பதிலும் ஆவணக்காப்பகம் வேறுபட்டு திகழ்கிறது. மற்ற நூலகங்களைப் போல் சாதாரண பைண்டிங்முறை பயன்படுத்தப்படாமல் நவீன பாதுகாப்பு முறைகள் செய்யப்படுகிறது. இங்கு இருக்கும் நூல்கள் வேறு நூலகங்களில் கிடைக்காத அரிய நூல்கள், ஆதலால் சிபான் துணி மூலம் பழுதுபார்த்தல், திசுக்காகிதம் மூலம் பாதுகாத்தல் மற்றும் லேமினேசன் என்று சூடுபடுத்தி காகிதங்களின் மேல் திசுக்காகிதங்களையும் கண்ணாடிக் காகிதங்களையும் ஒட்ட வைக்க இயந்திரங்களைப் பயன்படுத்துதல் ஆகிய முறைகள். இந்த இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டவையாகும்.

மேலும் காகிதங்களின் மேலுள்ள கறைகளையும், அமிலத் தன்மையினையும் போக்க பர்ரோவின் அமிலத்தன்மை நீக்க முறையில் கால்சியம் ஹைறடிராக்ஸைடு மற்றும் கால்சியம்பை கார்பனேட்டுக் கரைசல் பயன்படுத்துதல் போன்றவை மற்ற நூலகங்களின் முறைக்கு மேம்பட்ட பாதுகாப்பு ஆகும். ஆக அதிக செலவாகும் இம்முறைக்கு தகுதிவாய்ந்த நூல்களை தேர்வுசெய்யும் பொறுப்பு நூலகருடையதாகும்.

நூலகச் சேவைகள்

நூல்களைப் பெறுவதிலே வேறுபாடு, பெறப்பட்ட நூல்களைப் பேணுவதிலே பெறுமாற்றம், அத்தனையும் அரசிற்கும், ஆராய்ச்சிப் பணியாளருக்கும், கிடைக்கச் செய்கின்றவிதமே வித்தியாசம்தான். உலகம் முழுவதிலும் இருந்து சுமார் 300 ஆராய்ச்சியாளர்கள் வருடத்திற்கு வருகை தருகிறார்கள். இவர்களில் பல்கலைக்கழக பேராசிரியரும், படிக்கின்ற மாணவரும், வெளிநாட்டவரும், வெளியீட்டாளரும் அடங்குவர்.

இங்கு நூல்கள் இரவல் வழங்கப் பெறுவதில்லை. வசதிமிக்க ஆராய்ச்சிக் கூடத்தில் வைத்துப் படிக்க மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. மற்ற நூலகங்களைப்போல இரவல் தந்தால் பின்பு ஈடுசெய்ய இயலாத அரிய நூல்களாக இருப்பதால் வெளியே எடுத்துச் செல்ல அனுமதியில்லை. ஆகவே

ஆராய்ச்சியாளர்களின் வசதிக்காக பட்டியல் அட்டைகளில் ஆசிரியர், அவர்தம் புத்தகத்தின் விவரங்கள் தெரிவிக்கப்படுகிறது. மேலும் புதிதாக வரும் மாணவர்களின் தலைக்கேற்ற தேவையினை அறிய அவர்களுக்கு யோசனை கூறுதல் போன்ற பணிகள்.

முடிவுரை

வெறும் பட்டியல் அட்டைகளை மட்டும் தயார் செய்கின்ற நிலைமாறி, நூலகத்தில் கிடைக்கப்பெறுகின்ற, ஆராய்ச்சிக்கு உகந்த முதல்நிலைத் தகவல்களை தொகுத்தும், பட்டியல் இட்டுக் காட்டியும், அதன் சாரங்களைச் சுருக்கி தெரிவித்தும், கேட்ட மாத்தரத்தில் கிடைக்க எதிர்காலத்திலே ஒரு நிலை உருவானால், இன்றைக்கு மருத்துவம், அறிவியல் போன்ற துறைகளில் கணனி மூலம் தொலைத் தொடர்பு கொண்டு முன்னேறிய நாடுகளின் கணனியை வளரும் நாடுகளின் கணனிகளோடு இணைத்து இங்குள்ள கணனிகளிலே அச்சுப் போடப்பட்டு உடனுக்குடன் வழங்குவதைப்போல, நமது தேசிய ஆவணக் காப்பகத்திலும் கணனி வசதி உருவாக்கி ஏனைய முன்னேறிய மற்றும் பண்டைய நாகரிகம் வளர்ந்த நாடுகளின் கணனிகளின் தொடர்களின் பேரில் தொடர்புகொண்டு நமது நாட்டிலே இருக்கின்ற ஆவணக் காப்பகங்களிலே கிடைக்கின்ற கணனிகளில் அச்சுப்போட்டு நமது வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்குச் செய்திகளை அளிக்கக்கூடிய நிலை வந்தால் இன்றைய நூலகர்களின் பணிக்கு மதிப்பில்லாமல் போய்விடும். ஆகவே இன்றைய நூலகர்கள் நாளைய தேவைகளை எளிதல் கிடைக்கச் செய்ய தங்களை மேலும் தயார்படுத்திக்கொள்ள புதுமுறைக் கல்விதனைக் கற்க முயலவேண்டும். படித்தவர்கள்தான் படித்தவர்களுக்கு பாதைகாட்ட முடியும் என்பதனை உணர்ந்து அறிஞர்கள் உருவாவதில் துணைகொள்வதோடு தங்களையும் அறிவில் தேர்ச்சி பெற்றவர்களாக மாற்ற முற்பட்டு சேவை செய்ய வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் பணிப்பாங்கு

டாக்டர் வ. ஜெயதேவன்*

தென்னகப் பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் அன்னைப் பல்கலைக்கழகமாகச் சென்னைப் பல்கலைக்கழகம் விளங்குகிறது. ஒரு 136 ஆண்டுக்கால வரலாற்றினை உடைய இப்பழம் பெரும் பல்கலைக்கழகத்தின் பன்முகப்பட்ட பெருமைகளுக்கான அடிப்படைகளுள் இதன் பதிப்புத்துறையின் பணிகளும் அடங்கும். இப் பல்கலைக்கழகத்தில் நூல் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் முதன் முதலில் எப்பொழுது அரும்பியது ? எப்பொழுது அது செயலில் மலர்ந்தது ? எந்த நூல் முதன்முதல் வெளியிடப் பெற்றது ? போன்ற வரலாற்றுணர்ச்சி நிறைந்த வினாக்களுக்கு உடனடியாக விடை காண இயலாத நிலையில், பதிப்புத் துறை வரலாறும் அதன் பங்களிப்பும் பற்றித் தனி ஆய்வுகள் மேற்கொள்ள நிறைய வாய்ப்புள்ளது.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், உருது, இந்தி, சமசுகிருதம், ஆங்கிலம் முதலான மொழிகள் பலவற்றிலும் முப்பது துறைகள் சார்ந்த அறுநூற்றுக்கும் மேற்பட்ட அரிய நூல்களை மலிவான விலையில் அழகிய வடிவமைப்போடு வெளியிட்டு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக அறிவுத் தொண்டாற்றி வரும் சென்னைப் பல்கலைக்கழக பதிப்புத் துறையின் பணிப்பாங்கினைச் சுருக்கமாகப் புலப்படுத்த இக்கட்டுரை முனைகின்றது.

பாடத்திட்டங்கள்

பல்கலைக் கழகத் துறைகளும் இணைப்புக் கல்லூரிகளும் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனமும் கொண்டுள்ள எல்லாப் படிப்புப் பிரிவுகளுக்கும் உரிய பாடத்திட்டங்களை ஆசிரியர்கள், மாணவர்கள் நலன் கருதிப் பதிப்புத் துறை வெளியிட்டு வருகிறது.

---

* இயக்குநர், பதிப்புத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

பாடநூல்கள்

பல்கலைக் கழகப் பட்டப் படிப்புகளுக்கான பகுதி I,II மொழிப் பாடங்களுக்கு உரிய பாடநூல்களைப் பாடத்திட்டக் குழுவின் உதவியோடு உருவாக்கிப் பதிப்புத்துறை வெளியிட்டு வருகிறது.

அகராதிகள்

ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் என்றதும் அதன் அகராதிகள் தான் முதலில் நினைவுக்கு வரும். அந்த அளவிற்கு அகராதிக்கும் அப்பல்கலைக் கழகத்திற்கும் நெருங்கிய உறவுண்டு. அகராதியால் அப்பல்கலைக்கழகமும் அப்பல்கலைக்கழக்த்தால் அகராதியும் பெருமையுறும் நிலை உள்ளது. இந்நிலை, சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் அதன் அகராதிகளுக்கும் பொருந்துவ தாகும்.

தமிழ் அகராதியியலின் மணிமுடியாகவும் இந்திய அகராதியியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகவும் விளங்கும் ஏழு தொகுதிகளைக் கொண்டுள்ள தமிழ்ப் பேரகராதி, அச்சீடுகள் பல கண்டு ஆயிரக்கணக்கான படிகள் விற்ற வகையில் விற்பனையில் மாபெரும் சாதனை புரிந்துள்ள ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம், கன்னட அகராதியியல் வரலாற்றில் நிலையான இடம் வகிக்கும் கிட்டல் கன்னட ஆங்கில அகராதி, துளு அகராதி, இந்திய மெய்ப் பொருளகராதி முதலியனவும் தமிழ் நிகண்டுப் பதிப்புகள் பலவும் பல்கலைக்கழகப் பதிப்புத் துறையின் பெருமைக்குச் சான்று பகர்வன.

ஆய்வு நூல்கள்

பல்கலைக்கழகத் துறைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தமக்குப் பாங்கான பொருள்களில் ஆய்வு புரிந்து படைக்கும் அரிய ஆய்வு நூல்கள் பலவற்றையும் பதிப்புத்துறை வெளியிட்டுள்ளது; தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. மேலும், இவ்வாசிரியர்களது டாக்டர் பட்ட ஆய்வேடுகள், இணைப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களது டாக்டர் பட்ட ஆய்வேடுகள் ஆகியன புது தில்லியில் உள்ள பல்கலைக்கழக நிதிக் குழுவின் பொருளுதவியோடு வெளியிடப்படுகின்றன.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள பல்வேறு

அறக்கட்டளைகளின் சார்பில் இந்தியாவின் பல பகுதிகளிலும் உள்ள அறிஞர்களையும் அயல் நாட்டு அறிஞர்களையும் அழைத்து வந்து அவர்களைக் கொண்டு அறிவார்ந்த சொற்பொழிவுகள் ஆண்டுதோறும் நிகழ்த்தப் பெறுகின்றன. இச்சொற்பொழிவுகளுள் தக்கவற்றைத் தெரிவு செய்து வெளியிடும் பணியினையும் பதிப்புத்துறை ஆற்றி வருகின்றது.

கருத்தரங்கக் கோவைகள்

பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் அவ்வப்போது ஏற்பாடு செய்து நடத்தும் கருத்தரங்குகளில் வழங்கப்பெறும் அரிய கட்டுரைகள் பலவற்றைத் தொகுத்துப் பதிப்பிக்கும் பணியிலும் பதிப்புத்துறை ஈடுபட்டு வருகிறது.

ஆய்விதழ்கள்

பல்கலைக்கழக ஆசிரியர்கள் அவ்வப்போது படைக்கும் ஆய்வுக் கட்டுரைகளைச் சுமந்து வரும் வாகனங்களாக அமையும் ஆய்விதழ்களைப் பதிப்புத்துறை வெளியிட்டு வருகிறது. வாழ்வியல் (Humanities), அறிவியல், மெய்ப்பொருளியல், கீழைக்கலை மொழியாய்வு, மரபு சார்ந்த பண்பாட்டியல் ஆகிய துறைகளில் ஐந்து ஆய்விதழ்களும், தமிழியல் சார்புடைய ஆய்விதழ்கள் இரண்டும் பதிப்புத்துறை வாயிலாக வெளியிடப்படுகின்றன.

ஆண்டேடு (Year Book)

அனைத்துலக நிகழ்ச்சிகளின் ஆவணமாக விளங்கும் ஆண்டேடு (Indian Year Book of International Affairs) ஒன்று சட்டவியல் துறையின் உதவியால் வெளியிடப்படுகிறது.

நூலடைவுகள்

சமசுகிருதத்துறை உருவாக்கிவரும் சமசுகிருத நூல் விவரப் பட்டியலைத் தொகுதி தொகுதியாகப் பதிப்புத்துறை வெளியிட்டு வருகிறது. இதுகாறும் இந்நூற்பட்டியலின் (New Catalogue Catalogorum) பன்னிரெண்டு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் அத்வைத வேதாந்த இலக்கிய நூலடைவு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. ஆய்வு வேட்கையுடையவர்களுக்கு நன்கு உதவக்கூடிய நூலடைவுகள் பற்பல இப்பதிப்புத்துறையால் வெளியிடப்படுகின்றன.

மொழி பெயர்ப்பு நூல்கள்

பல்கலைக்கழகம் மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுப் புகழ் மகுடம் சூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கம்பராமாயணம் மலையாளத்திலும், பெரியபுராணம் கன்னடத்திலும், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன இந்தியிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பதிப்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளமை சிறப்பாகக் கருதத்தக்கது. போப்பையரின் திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு மறு அச்சீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

அச்சில் வாரா அருந்தமிழ் நூல்கள்

இது வரை அச்சிடப் பெறாது ஓலைச் சுவடிகளில் முடங்கிக் கிடக்கும் அருந்தமிழ்ப் பனுவல்களைத் துறைத் தமிழறிஞர்கள் உதவியால் அச்சில் பதிப்பிக்கும் பணியினையும் பதிப்புத்துறை மேற்கொண்டு வருகிறது.

தகவல் நூல்கள்

பல்கலைக்கழகத் துறைகளிலும் இணைப்புக் கல்லூரிகளிலும் நடத்தப் பெறும் படிப்புப் பிரிவுகள் பற்றிய தகவல்களைத் தாங்கிய நூல் (Prospectus) ஆண்டுதோறும் பல்கலைக்கழக மாணவர் வழிகாட்டு மையத்தின் துணையோடு பதிப்புத்துறையால் வெளியிடப்படுகிறது. மேலும், இம்மையத்தின் உதவியால் தமிழ் நாட்டுக் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் நடத்தப் பெறும் படிப்புப் பிரிவுகள் பற்றிய தகவல்களைத் தரும் நூலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஒலி நாடாக்கள் (Audio Cassettes)

பல்கலைக்கழக இசைத்துறையின் முயற்சியால் பாரதியார் பாடல்கள் இசையமைக்கப்பட்டுப் பாடப்பட்டு இரண்டு ஒலி நாடாக்களில் பதிவு செய்யப்பட்டுப் பதிப்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

பரிசும் பாராட்டும்

தமிழ்ப் பேரகராதி உருவாக்கியமைக்காக அதன் பதிப்பாசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களுக்குத் தமிழக அரசு "இராவ்பகதூர்" பட்டமளித்துச் சிறப்பித்துள்ளது. டாக்டர் க.த. திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய திருக்குறள் நீதி இலக்கியம்

என்னும் நூல் சாகித்ய அகாதெமியின் பரிசு 1972-இல் பெற்றது. டாக்டர் கு. மோகனராசு எழுதிய "திருக்குறளில் மரபுகள்" என்னும் நூலும் 'திருவள்ளுவரின் குறிக்கோளியலும் உலகப் பொதுமையியலும்' என்னும் நூலும் தமிழக அரசின் பரிசுகளை முறையே 1983, 1984 ஆகிய ஆண்டுகளில் பெற்றன.

விற்பனைமுறை

பல்கலைக்கழகப் பணி நேரத்தில் விற்பனை மையத்தில் நேரடியாகப் பணம் செலுத்தி உரிய கழிவுடன் தேவைப்படும் புத்தகங்களை வாங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அஞ்சல்வழியாகவும் புத்தகங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பல்கலைக் கழகத் துறைகளில் பிஎச்.டி. பட்டப் பேற்றுக்காக ஆய்வு மேற்கொண்டுள்ள மாணவர்களுள் சிலர் பகுதிநேர விற்பனை முகவர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் வாயிலாகவும் நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அன்றியும், புத்தகப் பதிப்பாளர்கள் வாயிலாகவும் வெளியீடுகள் விற்பனையாகின்றன. நாட்டின் பல பகுதிகளில் அவ்வப்போது நிகழும் புத்தகக் கண்காட்சிகளில் பதிப்புத்துறை பங்கேற்றுப் பல்கலைக்கழக நூல்களைச் சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்து வருகிறது.

தமிழ்ச்சுவடி நூலகம்

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி*

சுவடித் தொகுப்பு

பழந்தமிழ்ச் சுவடிகள் பல உலகெங்கிலும் அரிய நூலகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமையாகத் தொகுத்து அனைத்துத் தமிழ்ச் சுவடிகள் அடங்கிய விவரப் பட்டியலை வெளியிடுவது தமிழாய்விற்கும் பிற துறைகள் ஆய்விற்கும் பெருந்துணையாய் அமையும். மருத்துவம், மனையியல், வானவியல், சோதிடம் பற்றிய பல்துறைத் தமிழ்ச் சுவடிகளும் இன்றைய அறிவியல் பார்வையோடு ஆராய்வதற்கு உரியனவாகும். இன்று கிடைக்கும் பழமையான மருத்துவச் சுவடிகளில் காணலாகும் மருத்துவக் குறிப்புகள் இன்றைய மருத்துவ அறிவியல் கருத்துகளோடு எந்த அளவில் பொருந்தி வருகின்றன என்பதையும் காண வேண்டும். அவ்வாறே மனை, வாஸ்து முதலிய கருத்துக்கள் இன்றைய கட்டுமானப் பொறியியல் செய்திகளோடு ஒப்பிட்டு ஆராய்தற்குரியன. நூல், நூல் பற்றிய கருத்துகள், தொகுப்பு, போற்றிப் பாதுகாக்கும் நெறி, பயன்படுத்தும் நெறி ஆகியன குறித்த பழஞ்செய்திகள் இன்றைய நூலக அறிவியல் செய்திகளோடு இணைத்துப் பார்க்கத்தக்கன. பழஞ்சுவடிகளில் காணலாகும் கருத்துகளையும் ஒப்பு நோக்கி ஆராய்வதற்குச் சுவடித் தொகுப்புகள் மிகமிக இன்றியமையாதனவாகும்.

நூல் மரபு

தொல்காப்பியம் முதற் கொண்டு பின்னைய இலக்கண நூல்களும், இலக்கியங்களும் நூல் பற்றிப் பல்வேறு செய்திகளைத் தருகின்றன. நூலின் இயல்பு நூலின் அழகு, நூலின் பயன்பாடு, நூலைப் போற்றிய நெறி, நூல்களைப் பல்வேறு வகையாகப்பகுத்தல், தொகுப்பு நெறி முதலாயின இச்செய்தி களால் நன்கு உணர முடிகின்றன. 'நூல்' என்னும் சொல்லினை அடிப்படையாகக் கொண்டு நூலகம், நூலறிவு, நூலுரைகாரர்,

---

* இணைப் பேராசிரியர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

நூலாசிரியர், நூல்நயம், நூல்குற்றம், நூல் வழக்கு, நூல் வல்லார், நூலோர் தொகுத்தமை, நூற்பொருள், நூன்முகம், நூன்மரபு, நூன்முடிபு எனப் பல சொல் வழக்குகள் இலக்கியங்களில் பயன்பட்டு வருவது பெரிதும் எண்ணத்தக்கது. 'முனைவன் கண்டது முதல் நூல்' என்றார் தொல்காப்பியர் (தொல் 649) முதல் வழி சார்பென நூல் மூன்றாகும் என்றார் நன்னூலார் (நன்னூல் 5) நூல் நுவலும் நெறி, நூல் கொள்ளும் நெறி ஆகியன குறித்து இலக்கண நூலார் நன்கு விவரித்துரைப்பர். பழந்தமிழ் நூல்களைப் பாடுபொருள் நிலையிலும், அடிவரையறை நிலையிலும் வகுத்தும் தொகுத்தும் தந்த முன்னையோர் நெறியை இன்றைய நூலகப் பகுப்பு நெறியோடு இணைத்துப் பார்ப்பின் புதிய செய்திகளைப் பெறக்கூடும். சுவடி, ஓலை, ஏடு, இதழ், தோடு, மடல், தந்திரம், தூக்கு, பனுவல், புத்தகம் எனப் பல்வேறு சொற்களை நூலுக்குப் பழந்தமிழர் வழங்கினர். தனித்தனியாகவும், பொதுவிடங்களிலும் சுவடிகளைச் சேமித்து வைத்துப் போற்றினர். சுவடிகளை நூலகம் போல அன்று தொகுத்து வைத்திருந்த செய்தி கல்வெட்டுகளினாலும் புலனாகின்றன. இங்ஙனம் சுவடிகள் தொகுத்து வைத்ததைச் 'சுரசுவதி பண்டாரம்' எனக் குறிப்பிடுவதும் எண்ணத்தக்கது. 'சரசுவதி பண்டாரம்' என்னும் நூல்நிலையம் சிதம்பரத்தில் இருந்தமையைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. சரசுவதி என்பது நூல்களையும் பண்டாரம் என்பது நூல்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ள இடம் என்பதையும் சுட்டும். சரசுவதி பண்டாரத்தில் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் இருந்தன. இந்தச் சுவடிகளைப் பார்த்துப் படியெடுப்பதற்கு சுவடிநூல் வல்லார் நியமிக்கப்பட்டிருந்தனர். தமிழ்ச் சுவடிகளையும் சமஸ்கிருதச் சுவடிகளையும் ஒப்பிட்டு எழுதும் பணியும் நடைபெற்றது. நூல்நிலையம் நன்கு நிருவகிக்கப்பட நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தியையும் அறிந்துகொள்ள முடிகின்றது. சுவாமிதேவர் என்பவர் நூல்நிலையப் பணியைச் செய்து வந்தார் எனவும் அறியமுடிகின்றது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் ஆண்ட சுந்தர பாண்டிய மன்னர்களின் கல்வெட்டால் இச்செய்தி தெரிய வருகின்றது. திருமுறைகள் சிதம்பரம் கோயிலிலிருந்துதான் கிடைத்தன என்பதாக இந்நூல் நிலையத்திலிருந்துதான் அவை கிடைத்தன எனலாம். சரசுவதி பண்டாரம் இருந்த இடத்தைத் திருமுறைகண்ட புராணம் 'மன்றுளாடும் கூர்த்த விருட்கண்டர் புறக்கடையின் பாங்கர் ஆர்ந்த தமிழிருந்த விடம்' எனக்

கூறுகின்றது. 'ஐயர் நடமாடும் அம்பலத்தின் மேல்பால்' இருந்ததாக மற்றொரு பாடலும் கூறும். அறிஞர் குழுவாகச் செயல்பட்டிருந்த இடம் என்பதால் நூல் நிலையம் இங்கு இருந்திருக்கக் கூடும். அப்போதிருந்த பல சூழல்களால் மூடப்பட்டிருந்த இந்த சரசுவதி பண்டாரத்தை முதலாம் இராஜ ராஜன் மீண்டும் புனரமைத்துப் பயன்படுமாறு செய்திருக்க வேண்டும். உமாபதிசிவாசாராயர் இதனைப் 'பண்டாரந் திறந்து விட்டான் பரிவு கூர்ந்தான்' என்று கூறுவதால் இதனை அறிய முடிகின்றது. எனவே கல்வெட்டியல் அறிஞர்களின் ஆய்வால் நம்முடைய பழைய நூல்நிலையம் பற்றிய செய்தி கிடைப்பது பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஆ. பத்மாவதி, தினமலர் 28.9.90). இவ்வாறே திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சேரன்மகாதேவி அப்பன் கோயில் நூல் நிலையமும் குறிப்பிடத்தக்கது என்பர். வச்சிரநந்தி என்றும் சமணப் பெரியார் பல சுவடிகள் பாதுகாத்து வைத்திருந்ததை வரலாறு நமக்குக் காட்டும். இங்ஙனம் தொன்று தொட்டுப் போற்றிப் பாதுகாத்து வந்த சுவடிகள் பல்வேறு நிலைகளில் படியெடுக்கப்பட்டுச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

சுவடி நூலகங்கள்

தமிழ் நாட்டிலும் பிறவிடங்களிலும் ஏறத்தாழ ஐம்பதிற்கும் மேற்பட்ட சுவடி நூலகங்களில் இன்று சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில வருமாறு:

1. அரசினர் சுவடி நூலகம், சென்னை
2. வே. சாமிநாதையர் நூலகம், அடையாறு, சென்னை
3. உலகத்தமிழ் ஆராய்சி நிறுவனம், சென்னை
4. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
5. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோவை
6. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
7. சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை
8. பிரம்ம ஞான சபை நூல் நிலையம், அடையாறு
9. புதுவை பிரெஞ்சு நிறுவனம், பாண்டிச்சேரி
10. காசிமடம், திருப்பனந்தாள்

11. கலைமகள் கல்வி நிலையம், [illegible]

12. சங்கராச்சாரியர் சுவாமிகள் மடம், [illegible]புரம்

13. தருமபுரம் ஆதின மடம், மாயவரம்

14. திருவாவடுதுறை ஆதீனமை திருவாவடுதுறை

15. சரவணம்பட்டி கௌமார ஆதீனம், கோவை

16. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

17. மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை

18. கல்கத்தா தேசிய நூலகம், கல்கத்தா

20. திருவனந்தபுரம் அரசினர் சுவடி நூலகம்

எனப் பல்வேறு நூலகங்களில் உள்ள சுவடிகள் மொத்தம் பல ஆயிரத்திற்கும் மேற்பட்டனவாய் விளங்குகின்றன. அயல் நாடுகள் பலவற்றிலும் தமிழ்ச் சுவடிகள் பல உள. இச்சுவடிகள் அனைத்தையும் தொகுத்து முறைப்படுத்தி வைத்தால் பழஞ்செய்திகள் பலவற்றையும் அறிந்து கொள்ள முடியும்.

மீட்சி இயக்கம்

பழந்தமிழ்ச் சுவடிகளைப் போற்றிப் பாதுகாத்திருப்பின் தமிழ் இலக்கிய வரலாறு இன்னும் முழுமை பெற்றிருக்கக் கூடும். கால வெள்ளத்திற்குப் பல்வேறு பழஞ்சுவடிகள் இரையானமையால் உரையாசிரியர்களின் கூற்றால் தெளியப்பெறும் பல்வேறு நூல்களும் இன்றும் பெயரளவிலேதான் உலவி வருகின்றன. 'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து நெருப்பிலே நின்று நீரிலே பயின்ற பாவை ' தமிழ் மகள் என்பர். ஆனால் காலந்தோறும் நெருப்பிலும் நீரிலும் மடிந்த சுவடிப் பாவைகள் தாம் மிகப் பலவாயின. அழிவினின்றும் தப்பிய சுவடிகள் பலவற்றையும் தக்கவாறு வெளிப்படுத்தும் பயனுள்ள முயற்சி ஒன்றினை உருவாக்குதல் வேண்டும். எனவே 'சுவடிகள் மீட்சி இயக்கம்' ஒன்றினைத் தொடங்குதல் இன்றைய சூழலில் மிகமிக இன்றியமையாதது எனலாம்.

சுவடிகளைத் தொகுத்து வைத்துள்ள அனைத்து நிறுவனங்களிலும் உள்ள சுவடிகள் குறித்து ஆராய்ந்தறிவது

அவசியமாகும். அவ்வகையில் கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகளைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

கல்கத்தா தேசிய நூலகம்

தேசிய வரலாற்றுப் பெருமை பெற்ற கல்கத்தா நூலகம் வைசிராய்கள் வாழ்ந்த பெருமாளிகையாகும். மிக அழகிய அமைப்புடன் விளங்கும் இப்பெருமாளிகையில் 1948ஆம் ஆண்டு இந்நூலகம் தொடங்கப் பெற்றது. இந்திய நாட்டில் வழங்கும் எல்லா மொழிகளுக்கும் உரிய நூல்களை இந்நூலகம் தொகுத்து வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் நூல்கள் பலவற்றையும் சொந்தமாகத் தொகுத்துவைத்திருந்து தமிழறிஞர் பலரும் இந்நூலகத்திற்குத் தங்களுடைய தொகுப்புகளை வழங்கியுள்ளனர்.

நூலகத் தமிழ்ப் பகுதி

தமிழ்ப் பகுதிக்குக் கிடைத்த பெரிய நன்கொடை பேராசியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தொகுத்து வைத்துப் போற்றிய நூல்களும் பழஞ்சுவடிகளுமாகும். பேராசியர் மறைவிற்குப் பின் அவர் தொகுத்தவை அனைத்தும் இந்நூலகத்திற்கு நன்கொடையாக அளிக்கப் பெற்றன. ஏறத்தாழ 4500 நூல்களுக்கு மேல் (தமிழ்: 2943; ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் நூல்கள் 1543; சமஸ்கிருதம் 113, மலையாளம் 16) அவருடைய தொகுப்பாகத் தனிப் பேழையில் வைக்கப் பெற்றுள்ளன. இவற்றோடு பேராசிரியர் அவர்கள் அவ்வப்போது தொகுத்து வைத்திருந்த பற்பல குறிப்புகள், அகராதிகள், சிற்சில நூல்களுக்கு ஏடுபார்த்து எழுதி வைத்திருந்த தாள்கள் ஆகியவை உள. இவற்றையெல்லாம் முறைப்படி தொகுத்து ஆராய்ந்து பதிப்பித்தால் பல அரிய செய்திகள் கிடைக்கக்கூடும்.

தமிழ்ச் சுவடிகள்

பேராசிரியர் தொகுத்து வைத்திருந்த சுமார் 340க்கும் மேற்பட்ட சுவடிகள் இந்நூலகத்தில் நன்கு பாதுகாத்து வைக்கப் பெற்றுள்ளன. இத்தொகுப்பில் சங்க நூல்களிலிருந்து பிற்காலப் பிரபந்தங்கள் வரை பல்வேறு அரிய சுவடிகள் உள. ஒரு சுவடியிலேயே வேறு நூல்கள் சேர்ந்து அமைந்துள்ள சுவடிகளும் பலவாகும். இவற்றையும் தனித்தனியே நன்கு பிரித்து நோக்கினால் சுவடிகளின் எண்ணிக்கை இன்னும் மிகுதியாகக் கூடும். இனி இந்நூலகத்தில் தொகுத்து வைக்கப் பெற்றுள்ள சுவடிகள் பற்றிய விவரங்களைக் காணலாம்.

நிகண்டுகள்

திவாகரம், பிங்கலம், ஆசிரிய உரிச் சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டு, அகராதி நிகண்டு முதலாய பல்வேறு நிகண்டுச் சுவடிகளும் இத்தொகுப்பில் உள்ளன. இங்குள்ள நிகண்டுச் சுவடிகளுள் திவாகரச் சுவடிகள் மட்டும் 27 உள்ளன. இவற்றில் முழுமை நிலையில் உள்ள சுவடிகள் 17, ஒரு சில தொகுதிகள் குறைவுபட்டுள்ளன. பேராசிரியர் தம் கைப்படப் பாடபேதக் குறிப்புடன் பிரதி செய்துள்ள சுவடியும் குறிப்பிடத்தக்கது.

பிங்கலம் முதலிய பிற நிகண்டுகள் மொத்தம் 38 உள்ளன. இவற்றுள் பல்பொருட் சூளாமணி, விரிவு பொருள் நிகண்டு ஆகியவை அச்சிடப் பெறாதவை எனலாம்.

பல்பொருட் சூளாமணி

அகராதி நிகண்டு போல் அகரவரிசையில் அமைந்துள்ளது. 'வெம்மையெனும் பெயர் விருப்பும் உட்டணமும்' என்னும் நூற்பாவோடு, இச்சுவடி முடிவுறுகிறது. மொத்தம் 67 ஏடுகள் கொண்ட ஒரு பகுதியும் 59 ஏடுகள் கொண்ட மற்றொரு பகுதியும் இச்சுவடியில் அமைந்துள்ளன. ஆராய்ந்து பதிப்பிடற்குரிய சுவடிகளுள் இதும் ஒன்றாகும்.

விரிபொருள் நிகண்டு

மொத்தம் 142 ஏடுகளைக் கொண்ட இச்சுவடி நல்ல நிலையில் முழுமையாக உள்ளது. சுவடியின் இறுதியில் 'ஒலி பற்றிய பெயர்த் தொகுதி கவிதை பதினெட்டாகுமே' என முடிகிறது. 'ஆகத் தொகுதி 10க்குச் செய்யுள் 283' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் இந் நிகண்டு பத்துத் தொகுதிகளைக் கொண்டதாக அமைந்தது எனலாம்.

சதுரகராதி

வீரமாமுனிவர் எழுதிய சதுரகராதி ஏடுகளும் உள. அந்நூல் பதிப்பித்த பின்னர் அச்சு நூலைப் பார்த்துச் சுவடியில் எழுதி வைத்துள்ள குறிப்பும் ஏட்டில் காணப்படுகிறது. அக் குறிப்பு வருமாறு:

"வீரமாமுனிவர் செய்த சதுரகராதியில் தொகையகராதி தரங்காபுரம் சண்முக கவிராசர் அவர்களால் பார்வையிடப்பட்டுச் சிந்தாதிரிப்பேட்டை நெல்லுமண்டி வெங்கட்டராம முதலியார் அவர்கள் புத்திரராகிய கேசவ முதலியார் அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது"

இச்சுவடி எழுதிய ஆண்டுபற்றிய விவரமும் இச்சுவடியில் குறிக்கப் பெற்றுள்ளது. 'சாலிவாகன ஞு 1770-இல் நிகழ்கின்ற கீலக ஞு" என்னும குறிப்பு அவர் தம் கால உணர்வைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

நாட்குறிப்பு

சுவடி எழுதத் தொடங்கின நாளிலிருந்து ஒவ்வொரு நிலையிலும் கால உணர்வு தோன்றச் சுவடிகளில் எழுதி வைத்திருக்கும் குறிப்புகள் வியத்தற்குரியவாய் விளங்குகின்றன.

அகராதி 68 என்னும் எண் குறிக்கப் பெற்றுள்ள ஒரு சுவடியில் 278 ஏடுகள் உள்ளன. (இவ்வெண் கல்கத்தா நூலகக் குறிப்பெண் ஆகும்). 'அகரம் நாத மாத்திரையியல் பால் பிறந்த அகரம்' எனத் தொடங்கி 'வௌவல் கொள்ளையிடல் பிடித்தல் வாருதல்' வரை உள்ளது. இவ்வேட்டின் இறுதியில் அமைந்துள்ள ஒரு குறிப்பு ஏட்டின் தலைமுறையைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. அக்குறிப்பு வருமாறு:

'பிள்ளைக்கண் பிள்ளையவர்கள் குமாரர் ஆதிநாத பிள்ளை அகராதி. மேற்படியார் மகன் இளையவன் பெரிய திருவடிப்பிள்ளை எழுதினது. அகராதி வயித்திய லிங்கன் பிள்ளை ஏடுபார்த்து எழுதினது'

என்னும் குறிப்பு வரலாற்றுணர்வையும் காட்டும். அவ்வாறே ஏடுபார்த்து எழுதும் வரலாற்றினை நாட்குறிப்புப் போலச் சுவைபடக் குறித்துள்ளனர்.

"1103 ஞு சர்வசித்து ஞு தை மீ 7 வெள்ளிக்கிழமை பூர்வ பட்சம் திருவோணம் நட்சத்திரம் பகல் கும்ப லக்கினத்தில் தொடங்கியெழுதினது. மேற்படி வருஷம் மாசி மீ 12 வெள்ளிக்கிழமை பூர்வபட்சம் கார்த்திகை நட்சத்திரம் பகல் கும்ப லக்கினத்தில் பெரிய திருவடி மேற்படி அகராதியெழுதி நிறைவேறினது. இந்த அகராதியை நான் 1104 ஞு வைஷ மீ 19 தேதி வெள்ளிக்கிழமை ரேவதி நட்சத்திரம் துலா லக்கின முதல் பிழை பார்த்து உயிர் எழுத்து உயிர் மெய் எழுத்து ஒற்றெழுத்து இதுகளில் மொழிக்கு முதல் எழுத்துக்களும் நூதனம் எழுதி 1104 ஞு பங்குனி மாதம் 14 வெள்ளிக்கிழமை எழுதி முடிந்தது. ஆழ்வார் திருவடிகளே சரணம். இன்னும் பிழை தீர வேண்டியது உண்டு".

இக்குறிப்பில் எழுதத் தொடங்கிய நாள், முடிவுற்ற நாள்; பிழை பார்க்கத் தொடங்கிய நாள்; முடிவுற்ற நாள்; அனைத்தும் வெள்ளிக்கிழமை எனச் சுட்டப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே 'இன்னும் பிழை தீர வேண்டியது உண்டு' என்னும் குறிப்பு, இன்னும் செம்மையாய்ச் செய்ய வேண்டும் என்னும் அவர் தம் ஆர்வத்தையும் புலப்படுத்தும்.

சதுரகராதியினின்றும் வேறுபட்ட ஓர் அகராதி ஏடும் (72) இத்தொகுப்பில் உள்ளது. 'அகக்காழ் - உள்வயிரம்' எனத் தொடங்கி 'வெளவியம்-துன்பம்' என்பது வரை இருப்பதால் இது முழுமை பெற்ற அகராதியாய் இருக்கக் கூடும்'. இன்னொரு சுவடி (77) 'அ - ஸ்ரீமன் நாராயணன்' எனத் தொடங்கி 'முக்கோடம்' வரை எழுதப்பெற்றுள்ளது.

இச்சுவடிகள் அனைத்தையும் நேரில் நன்கு ஆராய்ந்து பார்த்தால் தான் அவற்றின் பயன்பாடும், மதிப்பும் நன்கு புலனாகும்.

விகடப் பிரசங்கப் பழமொழி

அகரநிரலில் பல்வேறு பழமொழிகளைத் தொகுத்துத் தருவதாக இச்சுவடி அமைந்துள்ளது. 'அகங்கண்டது புறஞ் சொல்லாதே' எனத் தொடங்கி 'வைத்த பண்டம் பார்த்து வயிறெரிந்து நின்றது போல' என்னும் பழமொழியோடு நிறைவு பெறுகின்றது. இப்பழமொழித் தொகுப்பின் தலைப்பே மிகவும் புதுமையாக உள்ளது. பெயரிலிருந்தே வேடிக்கையாகச் சொற்பொழிவு செய்வோருக்கு இது மிகவும் பயன்படும் என ஊகிக்கலாம். முழுமையாகவும் நல்ல நிலையிலுமுள்ள இச்சுவடிகளை ஆராய்ந்து பதிப்பிக்க ஆவன செய்தல் வேண்டும்.

இச்சுவடிக் கட்டில் மற்றும் ஒரு பழமொழித் தொகுப்பு உள்ளது. 'அகப்பை சுவை அறியுமா' எனத் தொடங்கும் இச்சுவடி முழுமையாக இல்லை. மேலும் இத் தொகுப்பில் 'அசுரகுலம் அழிவதேன்? அரிவையர் துணி கிழிவதேன்?' எனத் தொடங்கும் இரு சொல்லலங்காரம் என்னும் நூலும் அகர வரிசையில் அமைந்துள்ளதாகத் தெரிகின்றது.

இலக்கண நூல்கள்

தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல், வீரசோழியம் யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், அகப்பொருள்,

இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், நவநீதப் பாட்டியல், அணியிலக்கண வினா விடை முதலான பல ஏடுகள் இந்நூலகத்தில் உள்ளன.

தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரைக்கு ஆதாரமான ஏடு நம் நாட்டிலேயே இங்கு தான் உள்ளது என்று அறிஞர் கருதுவர். இதனை வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்களும் பேராசியர் வையாபுரிப் பிள்ளை அவர்களும் முதன் முதலாகச் சென்னை வாவிள்ளா ராமசாமி சாஸ்துருலு அண்டு ஸன் வாயிலாக 1936-இல் வெளியிட்டனர் என்பர்.[1]

எனவே தொல்காப்பிய இளம்பூரணர் பொருளதிகார ஏட்டைப் பெற்றிருக்கும் தனிப்பெருமை இந்நூலகத்திற்கு உரியதாகின்றது எனலாம். ஒரே சுவடிக்கட்டில் பல இலக்கண நூல்களையும் தொகுத்து எழுதி வைக்கும் மரபும் இருந்தமை இங்குள்ள ஏடுகளால் அறியமுடிகின்றது. காரிகை மூலம், அகப்பொருள் மூலம், சிதம்பரப் பாட்டியல், அபிதானப் பொருத்தப் பாட்டியல், இரத்தினச் சுருக்கம், பன்னிருபாட்டியல் ஆகியவற்றின் தொகுப்பு ஒரே சுவடியில் உள்ளது. நன்னூல் விருத்தியுரை கொல்லம் 857-ஆம் ஆண்டில் அதாவது கி.பி. 1682-இல் எழுதப்பெற்ற காலப் பழமையுடைய ஏடு ஒன்றும் இங்குள்ளது.

'உவமையலங்காரம்' என்னும் 34 பாடல்கள் அடங்கிய ஒரு சிறு நூலும் உள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை. 'சிவ குருநாதன் சேவடி வணங்கி உவமையின் இயல்பு உரைக்குவன் யானே' எனத் தொடங்கும் இச்சுவடியையும் நன்கு ஆராய்ந்து பதிப்பிக்கலாம்.

குறள் சுவடிகள்

குறட்பாவிற்கு ஒரு வரி விளக்கமாக அமைந்துள்ள சுவடி குறிப்பிடத் தக்கதாகும். ஏட்டில் ஒரே வரியில் அமையுமாறு குறளின் தொடக்கமும் விளக்கமும் அமைந்துள்ளது.

---

1. மு. சண்முகம் பிள்ளை, தமிழாய்வு (தொ. 9), சென்னைப் பல்கலைக் கழகம், 1979 : பக்கம், 39.

'அகரமு - எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாகவுடையன வது போலுலகங் கடவுளை முதலாக வுடையது'

என்பது போன்று அமைந்த ஒரு வரி விளக்கத் திருக்குறள் (எண். 121) பெரிதும் ஆராய்தற்குரியது. திருக்குறள் விளக்கமாய் அமைந்த திருவேங்கட வெண்பா (123), திருக்குறள் விருத்தம் (124) ஆகிய நூல்கள் இன்னும் அச்சானதாகத் தெரியவில்லை.

திருவேங்கட வெண்பா 19 ஏடுகளைக் கொண்டு நல்ல நிலையில் விளங்குகின்றது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒவ்வொரு குறளைக் கொண்டு வெண்பாவாகப் பாடியுள்ளார். பொருட்பால் 108-ஆவது அதிகாரம் வரை உள்ளது. '1013-ஆம் வருடம் மாசி மாதம் 16 ஆதிவாரத்தன்று எழுதி முடிந்தது' என்னும் குறிப்புள்ளது.

திருக்குறள் திருவிருத்தம் 84 ஏடுகளைக் கொண்டது. தலையேட்டில் "செல்ல மருதூரிலிருக்கும் நம்பி குரிச்சி தாமோதரப் பெருமாள் முதலியார் புத்திரன் பரமசிவ முதலியார் வரகவியாகச் சொல்லியது" என்று குறிக்கப்பட்டுள்ளது. 78-ஆவது அதிகாரம் வரை அமைந்துள்ளது.

பதிப்பியல் நெறி

அண்மைக் காலத்தில் அச்சியற்கலையும், பதிப்புக்கலையும் நன்கு வளர்ந்து வருகின்றது. ஏறத்தாழ நூற்று எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர்க் கிடைத்த திருக்குறள் சுவடி ஒன்றின் மூலமாகவும் அதில் எழுதப்பட்டுள்ள பிழைதிருத்தம் மூலமாகவும் நமக்கு அரிய பதிப்பு வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன.

"திருவள்ளுவர் குறள், திருவள்ளுவ மாலை, நாலடியார்" என்னும் (128) பெயரில் அமைந்துள்ள ஏடு ஓர் அரிய பாடபேத ஆராய்ச்சி ஏடாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. இக்குறிப்பினை விரிவாக ஆராய்ந்தால் 'மூலபாட ஆய்வியல் (Textual criticism) குறித்து முன்னையோர் கொண்டிருந்த எண்ணம் நன்கு புலனாகும். இவ்வோலைச் சுவடியால் பதிப்பு நெறியின் பண்பும் புலனாவதைக் காணலாம்.

குறளின் முதல் பதிப்பு

திருக்குறளின் மூலப் பதிப்புகளுள் தமிழில் மிகத்

தொன்மையான பதிப்பாக இன்று நமக்குக் கிடைப்பது கி.பி. *1812*-இல் அச்சான 'திருக்குறள் மூலபாடம்' என்னும் தலைப்பில் அமைந்த நூலாகும். 'இலக்கண விலக்கிய வராய்ச்சியுடையவர் களாலிகிதப் பிழையற வாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டது' என்னும் குறிப்புடனும் 'தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சிற் பதிக்கப்பட்டது. மாசத தினசரிதை அச்சுக்கூடம். இ.ஆ.' (*1812* எனத் தமிழ் எண்ணில் தரப்பட்டுள்ளது) என்னும் குறிப்புடனும் தலைப்புப் பக்கம் திகழ்கின்றது.

மர எழுத்தால் அச்சடிக்கப்பட்டுள்ள இப்பதிப்பே திருக்குறள் பதிப்பு வரலாற்றில் முதல் நூலாகத் திகழ்கின்றது. தமிழகத்தில் முதன் முதலாகக் கி.பி. *1712*-இல் தரங்கம்பாடியில் முதல் அச்சுக்கூடம் ஏற்பட்டது. எனவே சரியாக ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் இப்பதிப்பு நமக்குக் கிடைத்துள்ளது. இப்பதிப்பு நூலின் முன்னுரையில் காணும் குறிப்புகள் உண்மைப் பாடத்தைத் தேர்ந்து தெளிவதற்கு என்னென்ன முறைகளை மேற்கொண்டனர் என்பதைக் காட்டும்.

நெடிய கால இடைவெளிக்குப் பின்னர் ஒரு நூலினைப் பதிப்பிக்கும் போது ஆசிரியரின் உண்மைப் பாடத்தைத் தெளித்து பதிப்பிப்பது என்பது சிக்கலான செயலாகும். கிடைக்கின்ற பல வறு சுவடிகளையும் திரட்டி நுணுகி ஆராய்ந்து மூல பாட த்தைத் துணிதல் வேண்டும். நூலுக்குள்ளேயே கிடைக்கின்ற ஆத ரங்கள் (Internal evidences) நூலின் நடை, நூலில் கை ாளப்படும் சொற்களின் தன்மை வரலாற்றுக் குறிப்புகள் முத ாயின கொண்டு மூல பாடத்தைத் துணியலாம் என்பர். இரண்டாவதாக நூலுக்கு வெளியே கிடைக்கின்ற ஆதாரங்கள் (External evidences) நூலாசிரியருடைய பிறபடைப்புகள் அவர் காலத்திய பிறபடைப்புகளில் காணப்படும் அந்நூலைப் பற்றிய குறிப்புகள், மேற்கோள்கள் முதலாயினவும் மூலத்தைத் துணிதற்குப் பயன்படும்.[2]

1812-இல் தோன்றிய 'திருக்குறள் மூலபாடம்' என்னும் இம்முதல் பதிப்பில் சுவடிகளைப் பதிப்பிக்க வேண்டிய நோக்கம்

---

2. அ. விநாயக மூர்த்தி, மூலபாட ஆய்வியல், பாலமுருகன் பதிப்பகம், மதுரை, *1978*, பக்கம் *73*.

பற்றியும், பதிப்பிக்கும் போது மூலபாடம் பிழைபடாமல் இருப்பதற்குக் கையாண்ட நெறிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. "இவை அச்சிற்பதிக்கு முன் தென்னாட்டில் பரம்பரை ஆதீனங்களிலும் வித்துவ செனங்களிடத்திலுமுள்ள சுத்த பாடங்கள் பலவற்றிற்கு மிணங்கப் பிழையற இலக்கண விலக்கிய வாராய்ச்சியு டையவர்களாலாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டன" என்னும் குறிப்பு திருக்குறளின் அனைத்துச் சுவடிகளையும் தொகுத்துப் பார்த்த செய்தியை அறிவிக்கும். சுத்த பாடங்களைத் தீர்மானிப்பதற்குத் தனி ஒருவரின் முயற்சி பெரிதும் பயன் தராது. அறிஞர் குழு கூடி முடிவெடுத்தமையும், அவ்வாறு எடுத்த முடிவையும் பல்வேறு அறிஞர்களுக்கு அனுப்பிக் கருத்துரை பெற்றதையும் இப்பதிப்பின் வரலாறு நமக்குக் காட்டும்.

இங்ஙனம் பல்வேறு அறிஞர்களிடம் அனுப்பியும், ஆய்ந்தும் முடிவு கண்ட இப்பதிப்பிலும் பிழைதிருத்தம் கண்ட வரலாறு இந்நூலகத்தில் உள்ள சுவடியொன்றினால் அறிய முடிகின்றது. இந்நூல் அச்சாசனத்திற்குப் பின்னரும் இந்நூலினைப் பார்த்து ஓலையில் படியெடுத்து எழுதி வைத்துள்ளனர். அங்ஙனம் படியெடுத்தவர்கள் பாடபேதங்களைக் கூர்ந்தாராய்ந்து பிழை திருத்தியுள்ளனர். அந்த ஓலைச் சுவடியில் காணப்படும் குறிப்பு வருமாறு:

"திருநெல்வேலி அம்பல வாண கவிராயர் பிழை தீர்த்துச் சென்னைப் பட்டினத்துக்கு அனுப்புவிச்சு அவ்விடத்திலிருந்த திருவாவடு துறை ஆதின வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர் காழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடிக் கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற்பதித்த காயிதப் பொத்தகத்தை ஆழ்வார் திருநகரியில் தேவர்பிரான் கவிராயர், ஆதிநாத பிள்ளை தலத் தேடுகள் வைத்துச் சோதித்து வேறேடு எழுதியிருப்பது. மறுபடி திருநெல்வேலியில் அம்பலவாண கவிராயரிடத்தில் தீர்மானமானது. ஆழ்வார் திருநகரியில் சோதித்தது .... நம்முடைய ஏடு சுத்தமாகத் திருத்தியிருக்கிறது".

என்னும் குறிப்பினால் அச்சேறிய திருக்குறளின் முதல் பதிப்பிலும் மூலபாடங்களைத் திருத்தி மீண்டும் பதிப்பாசிரியருக்கே அனுப்பித் தீர்மானம் செய்த பதிப்பு வராலாறு புலனாகும். இவ்வோலைச் சுவடியில் பிழைதிருத்தங்கள் பற்றி விரிவான குறிப்புகள் இருப்பது

மல்லாமல் அவற்றை அட்டவணைப் படுத்தியும் பின்வருமாறு தந்துள்ளனர்.

அதிகாரம்	குறள்	ஆழ்வார்திருநகரி ஏடு	அச்சடி பிழை

என்னும் நான்கு தலைப்புகளில் அமைத்துள்ளனர். எனவே இச்சுவடி திருக்குறள் பாடபேத ஆராய்ச்சி ஏடாகவும் விளங்குகின்றது.

பழமையான ஏடுகள்

சிலப்பதிகாம், சிந்தாமணி, சூளாமணி முதலாயவற்றின் ஏடுகளுள் சிந்தாமணி ஏடு மிகவும் காலப் பழமை வாய்ந்ததாயிருக்கக் கூடும். நச்சினார்க்கினியர் உரையுடன் அமைந்த ஏடு கி.பி. 1611-இல் எழுதியதாகும். இது ஏறத்தாழ 400 ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டதாகும். 1682-இல் எழுதப்பட்ட நன்னூல் விருத்தியுரை ஏடும், 1702-இல் எழுதப்பட்ட திவாகரம் ஏடுகளும் மிகப் பழமையானவை. சிலப்பதிகாரத்தைத் தழுவி எழுதிய கோவலன் கதை என்னும் அம்மானை ஏடும் அச்சில் வந்ததாகத் தெரியவில்லை.

அரிய குறிப்புகள்

ஏடுகள் இலக்கியங்களைப் பாதுகாத்து நமக்கு அளிப்பது போலவே ஏடுகளில் காணப்பெறும் சில அரிய குறிப்புகளும் அவர்தம் பண்புகளைப் புலப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. ஏட்டின் இறுதியில் சுவடி எழுதுவோர் குறிப்பிட்டுச் சொல்லும் சில செய்திகளால் காலவரலாறும் குடும்ப வரலாறும் புலனாகின்றன.

"903 ளூ புரட்டாசி மீ 24 செவ்வாய்க்கிழமையும் பிரதமையும் அத்த நட்சத்திரமும் கூடின நாளில் நேமிநாதம் எழுதி முகிந்தேன். "சங்கத் தமிழை அனுசரிக்கும் மகாவித்வ சனங்களுக்குத் தொண்டு செய்யும் நெல்லை நாயகம் எழுத்து"

"சிவனடியார்க்குத் தொண்டு செய்யும் நெல்லைநாயகம் எழுத்து"

"பிழை பொறுக்கும் பெருமாள் எழுதியது"

"செக்காலை குடியிலிருக்கும் அடுத்தாரை ரட்சிக்கும் பெருமாள்

பிள்ளை எழுதியது"

என்னும் குறிப்புகள் எழுதுவோரின் பண்பைக் காட்டுவனவாம்.

ஆசிரியர்களிடம் அளவற்ற பக்தி கொண்டவர்கள் என்பதைத் "திருமேனி கவிராயரவர் பிரசாத குமாரர் ரத்தின கவிராயர் பாத தாமரையே தஞ்சம்" என்றும் "பெரிய திருவடி திருமேனி கவிராய குரு புத்திரரான ரத்தின கவிராய குரு சீபாத தாமரைகளே சரணம்" என்றும் குறிப்பதால் அறியலாம்.

சுவடியைப் போற்றல்

"பிழை பார்த்து மைக்காப்பு சாத்தவும்", "பொத்தகம் பிழையாயிருப்பது பார்த்துத் திருத்த வேண்டியது" என்னும் தொடர்கள் நூல் பிழையற வருதல் வேண்டும் என்னும் அவர் தம் வேட்கையினைக் காட்டும். "நன்னூல் பொஸ்தகம் நீடுழிகாலம் வாழ்ந்திருக்க" என நூலைப் போற்றிப் பாதுகாக்கும் மரபையும் இச்சுவடிக் குறிப்புகள் உணர்த்துகின்றன.

வரலாற்றுணர்வு

"திருவழுதி வளாட்டுத் திருநகரி அழகிய நம்பியா பிள்ளை திருவேங் கடமுடையான்" என்றும், "திருநெல்வேலி தேரோடும் வடக்குச் தெருவாகிய கற்பக விநாயகன் பெருந்தெரு வட சிறகு வடக்கானம் சேதுராய கோத்திரம் நமசிவாயம் பிள்ளை பௌத்திரனும் சங்க மூர்த்தியா பிள்ளையவர்கள் குமாரனுமாகிய காந்திமதி நாதன் கையெழுத்து" என்றும் குறிப்பதால் சுவடி எழுதுவோரின் வரலாற்றுணர்வு புலனாகும்.

இங்ஙனம் சுவடிகளின் இறுதியில் காணப்பெறும் அரிய தொடர்களும் சொல்லாட்சிகளும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத பேரின்பத்தருவனவாய் அமைந்துள்ளன.

அரும்பணி

அரிய ஏடுகளைத் தன்னகத்தே பெற்று விளங்கும் இந்நூலகச் சுவடிகள் தமிழார்வலர்களுக்கு அரும் பெரும் கருவூலமாகும். காலப்பழமையால் நலியும் இச்சுவடிகளை மீட்டுருவாக்கம் செய்யும்பணியை விரைவில் தொடங்குதல் நலம் பயக்கும். "திருக்குறள் தெளிவுரை" போன்று சுவடி வடிவிலேயே அக்காலத்தில் எழுதப்பெற்ற புதுமையும் இந்நூலகத்தில் உண்டு. அச்சில் வாராத அருந்தமிழ் நூல்களை வெளிக்கொணரும்

பணியில் விரைவாக நாட்டம் செலுத்துவது தமிழுக்கும் தமிழருக்கும் செய்யும் அரும்பணியாகும். "மறைந்து போன தமிழ் நூல்கள்" என்று அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி எழுதித் தொகுத்து நூலைப் பார்த்த பின்னரும் அப்பட்டியலில் மீண்டும் பல நூல்களைத் சேர்த்திட வாய்ப்புத் தருவதும் வாளா விருப்பதும் சரியாமோ?

துணை நூல்கள்

1. மு. சண்முகம் பிள்ளை, இ. சுந்தரமூர்த்தி, கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள், சென்னைப் பல்கலைக் கழகம், 1979.
2. அ. விநாயக மூர்த்தி, மூலபாட ஆய்வியல், பால முருகன் பதிப்பகம், மதுரை, 1978.
3. தமிழாய்வு, தொகுதி 9, சென்னைப் பல்கலைக் கழகம், 1979.

"நூலகரும் நூல் வல்லோர் ஆதல்"

Librarian : A Scholar

க. கணேசன்* M.A., M.L.I.S., B.Ed.,

முன்னுரை :

நூலகமும் சோதனைக்கூடமும் (Library and Laboratory) ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தின் இரண்டு கண்கள் போன்றது. நூலகம் தான் ஆராய்ச்சிகளின் வித்திடம், அறிவுக்களஞ்சியம் கண்டுப்பிடிப்புகளின் புகலிடம். அறிஞர்களை தொடர்புபடுத்தும் தொடர்நிலையம். இலாபத்தை எதிர்நோக்கா சமூக நிறுவனம். இது கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமின்றி வணிக மற்றும் தொழில்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

நூல்களைச் சேகரித்து, பாதுகாத்து, பராமரித்து அவைகளை சரியான வாசகர்களுக்கு சரியான நேரத்தில் வழங்குகின்ற நூலகர் அந்த நூல்களின் வல்லுனரே என்பதில் ஐயமில்லை. வாசகர்களுக்கு நூல்களை வழங்கும் போதும் அவர்களைத் தகவலுடன் தொடர்புபடுத்தும் போதும் ஒரு நூலகர் எவ்வாறு அந்த நூல்களின் வல்லோர் ஆகின்றார் என்பது இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. மேலும் நூலகங்கள் முன்பு இருந்த நிலையும் இப்போதுள்ள நிலையும் நூலகர்களின் பணியில் ஏற்பட்டுள்ள மாற்றமும் இதில் விவரிக்கப்பட்டுள்ளது.

நூலகத்தின் முந்தைய நிலையும் இன்றைய நிலையும் :

நூல்களை வாசகர்களுக்கு இரவல் வழங்கி திரும்பப் பெறுதல் மற்றும் இவற்றைப் பாதுகாக்கும் இடமாக மட்டுமே இயங்கி வந்த நூலகம், நூல்கள், பருவ இதழ்கள், மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களின் பெருக்கத்தால் இதன் பணிகள் மேலும் அதிகரித்துவிட்டது.

---

* நூலக உதவியாளர், கிண்டி வளாக நூலகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை - 25

இப்போது நூலகம் (Library) என்ற இடத்தைத் தகவல் தொடர்பு மையம் (Information Centre) எனவும் நூலகர் (Librarian) என்ற பதவியைத் தகவல் தொடர்பு அலுவலர் (Information Officer) எனவும், நூலகத்திலுள்ள நூல்களை (Books) தகவல் தொடர்பு சாதனங்கள் (Information Materials) எனவும், நூலக வாசகர்களை (Readers) நூலகத்தை பயன்படுத்துவோர் (Library Users) எனவும் மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது.

தகவல் சாதனங்களான புத்தகங்கள், பருவ இதழ்கள், தொழில் நுட்ப அறிக்கைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஒலிப்பதிவுகள், திரைப்படச்சுருள்கள் போன்றவற்றின் பெருக்கத்தினால் கணிப்பொறியின் (Computer) உதவியுடன் அவைகளை வகைப்படுத்தி வாசகர்களின் நேரத்தைச் சேமிப்பதில் நூலகர்கள் முனைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நூலகங்களின் இன்றைய முக்கியப் பணி :
(The role of the Libraries)

1. தானாகவே முயன்று கற்கும் (Self study) வாசகர்களுக்கு உறுதுணையாக அமைகிறது.
2. உள்நாட்டு மற்றும் பன்நாட்டு விஞ்ஞானம், அரசியல் மற்றும் பொருளாதார தகவல்களை வேற்றுமையின்றி அனைவருக்கும் வழங்குகின்றது.
3. எல்லா துறைகளிலும் அன்றாட கண்டுபிடிப்புகளை அனைவருக்கும் தெரிவிக்கும் ஒரு நிறுவனமாகத் திகழ்கிறது.
4. ஒருவருடைய ஓய்வான நேரத்தை (Leisure time) மற்றவர்களுக்கு பாதகமின்றி பயனுள்ள வகையில் பயன்படுத்தும் ஒரு நிறுவனமாகவும் திகழ்கிறது.
